# மாணவர் குரல்

## 5ம் ஆண்டு மலர்

**1974**

யாழ்ப்பாணம்

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய

உயர்தர மாணவர்மன்ற வெளியீடு,

# STYLIST

**Specialists in Tailoring Readeymade Garments & TEXTILES**

28, Model Market                Jaffna

மாணவர் குரல் 5ப்- ஆண்டுமலர்

அகிலமெல்லாம் ஜொலிக்க

எமது நல்லாசிகள்

G.C.E; சாதாரணதர உயர்தர பரீட்சைகளில் கலை வர்த்தக விஞ்ஞானபாடங்களில் சிறந்த சித்திகளைப்பெற

இன்றேநாடுங்கள்

# UniQue Education Center

211/6, THAIVALMUTHUMALIKAI
POWERHOUSEROAD
**Jaffna**

DIRECTOR
**K.L. Shanker**

# மாணவர் குரல்

## 5ம் ஆண்டு மலர்

யாழ்ப்பாணம்
கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய
உயர்தர மாணவர்மன்ற வெளியீடு

# மாணவர் குரல் 5 ம் ஆண்டுமலர்

## மலர்க்குழு

### மலர் ஆலோசனைக்குழு

உயர்திரு ஜே. எஸ். அரியரட்னம் (அதிபர்)
திரு எஸ் பாலசிங்கம் B S·c (காப்பாளர்)
திருமதி எஸ். பாலசுப்பிரமணியம் B.Sc. (காப்பாளர்)
வித்துவான் திரு சு. சின்னத்தம்பி
திரு பொ விஜயகாந்தன், B-A- Dip.in. Ed.(Cey)
திரு எஸ். வேலாயுதம்

### மலர்வெளியீட்டுப் பொறுப்பாசிரியர்

திரு த. தியாகராசா B.A ,B.A. (Spl); Dip. in. Ed (Cey)

### மலராசிரியர்கள்

செல்வன் V. இராஜேஸ்வரன்
செல்வன் M. S. K மகேஸ்வரன்

# வட்டாரக் கல்வியதிகாரியின் ஆசியுரை

யா) கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலய உயர்தர மாணவர் மன்றத்தினரின் வெளியீடான மாணவர்குரல்5ம் ஆண்டுமலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆற்றல்கள் பல எமது இளைஞர்களிடம் மண்டிக் கிடக்கின்றன. இவற்றை அவர்களின் உள்ளங்களினின்றும்வெளிப்படுத்துவதும் உண்மைக் கல்வியாகும். இதற்குப் பலவகையான வாய்ப்புக்களைப் பாடசாலை மாணவர்களுக்கு அளிக்க வேண்டும். சஞ்சிகைகளை வெளியிடுவதன் மூலம் மாணவர்களின் படைப்பாற்றல் வளர்க்கப்படுகிறது; தோண்டப்படாது தூர்ந்து கிடக்கும் மணற்கேணி தொட்டனைத்துஊறுவதுபோல மாணவர்களில் மறைந்துகிடக்கும் படைப்பாற்றல்கள் வாய்ப்புக்கள் கிடைக்கும்போது பிரவாகிக்கின்றன. எழுதுவதும்ஒருவகைத்திறன்.இத்திறன் வளர்க்கப்படக்கூடியதும் வளர்க்க வேண்டியதுமாகும். அது சிந்தனைக்குந்தூண்டுகோலாக அமைகின்றது.

மாணவர்களால் மாணவ சமுதாயத்திற்காக எடுக்கப்படும் இம்முயற்சி பாராட்டப்பட வேண்டியது. இப் பணி மேன்மேலும் ஓங்க, உயர வளர, இறைவன் அருள்நல்க இறைஞ்சுகின்றேன்:

நல்லூர்

கு. சோமசுந்தரம்
வட்டாரக் கல்வியதிகாரி

## அதிபர், உயர்திரு J.S அரியரட்ணம்

B.Sc, Dip.in.Ed.(SriLanka)

## அவர்களின் ஆசியுரை

எமது கல்லூரி உயர்தரமாணவர் '-மன்றம் மாணவர் குரலின் 5வது ஆண்டு மலரை இவ்வாண்டு வெளியிடுகிறது அம்மன்றம் இதனை 5 ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளியிட்டுவருவது மகிழ்ச்சிக்குரியது மாணவர்களுக்கென ஒருசஞ்சிகை இருப்பது அவர்கள் தமது கருத்துக்களையும் ஆக்கபூர்வமான சிந்தனைகளையும் சுதந்திரமாக வெளியிட ஒரு வாய்ப்பினை வழங்குகிறது

கடந்த 5 வருடகாலமாக மாணவர்குரல் தன் உயர்ந்த தரத்தைப் பேணிவந்திருக்கிறது இதனால் அதன் வெளியீட்டை மாணவர்களும் ஆசிரியர்களும் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்து வந்திருக்கின்றனர், எதிர்கால இலக்கிய கர்த்தாக்களும் எழுத்தாளர்களும் கல்லூரியிலிருக்கும்போதே தம் ஆற்றல்களையும் திறன்களையும் விருத்திசெய்ய இதுபோன்ற சஞ்சிகைகள் சந்தர்ப்பமளிக்கின்றன


மாணவர் குரலை மேலும் அதிக மாணவர்கள் பயன்படுத்தித் தமது எண்ணங்களை வெளியிட்டுதமக்கும் தம் கல்லூரிக்கும்பெருமையைத் தேடுவர் என நம்புகிறேன்

இறுதியாக மாணவர்குரல் 5ம் ஆண்டுமலரை வெளியிடுவதற்குப் பொறுப்பாயிருந்த ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

26-3-75

ஜே எஸ் அரியரட்ணம்

# எங்கள் அதிபர்



உயர்திரு J. S. அரியரட்ணம் B.S.c, Dip. in. Ed.

உப அதிபர்

உயர்திரு T. செல்லப்பா B. A. Dip-in-Ed. அவர்களின்

# ஆசியுரை

எழுச்சிபெற்று வரும் எமது சமுதாயத்தில் மாண வர் உலகம் பெரும் பங்கு கொள்ள வேண்டியதாயிருக் கிறது. இதனை வளரும் இளம் சமுதாயம் உணரவேண் டும். அவ்வகை உணர்வு உருப்பெறுவதற்கு மாணவ உலகம் ஊக்கமடைய வேண்டும். ''மாணவர் குரல்'' என்ற எமது கல்லூரி உயர்தர மாணவ மன்றத்தின் இதழ் இப்பெரும் பணியைச் சிறந்த வகையில் ஆற்றி வருகிறது. இவ்விதழ் தொடர்ந்து நற்பணி புரிய மாணவ மன்றத்தினர் முழுத்திறமையுடன் செயலாற்ற வேண்டும். ஐந்தாண்டுகளாக இம்முயற்சியில் ஈடுபாடுடையவர்கள் தம் திறமையைக் காட்டி ''மலரைச்'' சிறப்படையச் செய்து வந்துள்ளார்கள். அவர்களுக்கு எமது ஆசியைக் கூறுவதுடன், எதிர்காலத்தில் இப்பொறுப்பை ஏற்றுக் கொள்பவர்களும் சிறப்பாக இயங்க வேண்டுமென்று விரும்புகிறோம்,

25-3-75

T, செல்லப்பா

# காப்பாளர் வாழ்த்துரை

எமது கல்லூரியின் உயர்தர மாணவ மன்றத்தினர் மாணவர் குரலை ஐந்தாண்டு மலராக வெளியிடுவதை யிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

மனதில் எழுகின்ற எண்ணங்கள் எல்லாவற்றையும் எழுதுவது எழுத்தன்று, அவற்றில் நன்மை பயப்பவை எவை, தீமை தருபவை எவை என்று பகுத்தறிந்து நல்லனவற்றை மட்டுமே தரவேண்டும் சிலர் தாம் எழுதுவதெல்லாம் நன்மை பயப்பவையே என்று கருதுவர் அது தவறான எண்ணமாகும். ஒருவர் எழுதுவதை மற்றையோரும் நல்ல கருத்தென்று ஏற்றுக்கொள்ள வேண்டும். எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் கருத்து ஏற்றதொரு கருத்தென்று உறுதியாகக் கூறலாம்:

மாணவர் தங்கள் ஆர்வத்தையும், உற்சாகத்தையும் அணைகட்டி வைக்காது சிறந்த முறையில், நல்ல கருத்தை வெளிப்படுத்தினால் அதனால் நாட்டுக்கும் அவர்களுக்கும் பெரு நன்மையே விளையும். மாணவர் தங்கள் கருத்தை வெளியிடுவதற்குச் சிறந்த கருவியாக இது விளங்குகிறது.

இம்மலரை வெளியிடுவதற்காக ஈடுபட்டிருக்கும் மலர் ஆசிரியர்களுக்கு எங்கள் பாராட்டைத் தெரிவிக்கிறோம். உயர்தர மாணவ மன்றத்தினர் மனம் தளராது, இவ்வைந்தாண்டு மலருடன் நில்லாது தொடர்ந்து வெளியிட வேண்டும் என்று பெரிதும் விரும்புகிறோம்.

வாழ்க மாணவர் குரல்
வளர்க மன்றத்தின் பணி.

யா/கனகரத்தினம் ம. ம. வி.
யாழ்ப்பாணம்:

சு. பாலசிங்கம்
சி. பாலசுப்பிரமணியம்

## நுழைவாயிலில் ..................

அன்புள்ள வாசகர்களே!

பருவம் தோறும் சிறந்த முறையில் ஒலிக்கும் எம்மன்றத்தின் பருவ வெளியீடான மாணவர் குரல் இப்பருவம் புதுப்பொலிவுடன் ஐந்தாவது ஆண்டு மலராக உங்கள் கரங்களில் தவழ்கின்றது.

இவ்வேளையில் எமது குரலின் முதல் இதழை முகிழ்ந்து வைக்க முன் நின்ற ஆசிரியப் பெருந்தகைகள் வித்துவான் க. ந. வேலன், திருமதி ஜே. இராசதேவா ஆகியோருக்கும் நாம் கடமைப்பட்டிருக்கின்றோம்

எமது மாணவர்களின் நற்சிந்தனைகள், ஆற்றல்கள் எல்லாம் இலைமறை காய்களாக மறைந்து கிடப்பதைக்கண்டு அவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் நோக்குடன் இக்குரலைப் பருவந்தோறும் ஒலிக்கச் செய்த பத்திராதிபர்களுக்கும் அவ்வப் பருவ நிர்வாகக்குழுவினருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். தவிர்க்க முடியாத காரணங்களை முன்னிட்டு சில பருவங்களில் மாணவர் குரல் வெளிவரவில்லை. எனினும் அவ்வப் பருவங்களில் பொறுப்பேற்ற நிர்வாகக் குழு காப்பாளர்கள் உயர்திரு சு. பாலசிங்கம் B Sc, திருமதி S. பாலசுப்பிரமணியம் B Sc, ஆகியோரின் பெருமுயற்சியினால் இக்குரலைத் தொடர்ந்து வெளியிட்டு எம்மன்றத்தின் புகழையும், கல்லூரியின் புகழையும் வானளாவ ஓங்கச்செய்தது மாத்திரமன்றி இம் மாணவர் குரலைப் இப்பாரெங்கனும் பலரும் போற்றும் ஏடாகத் திகழ வைத்தமையையெண்ணி நாம் உண்மையிலேயே பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இம் மலரின் உள்ளே கல்விமான்களின் வாழ்த்துரைகளும், இனிய பல்துறைக் கவிதைகளும், பரிசுத்த தின உரையும், மாணவர்களின் ஆற்றலில் உருவாகிய கட்டுரைகளும் இன்பந் தருகின்றன. "மாணவர் குரலை" முகிழ்த்து வைத்த ஆசிரியப்பெருந்தகை வித்துவான் க. ந. வேலன் அவர்களின் கட்டுரையும், எமது அதிபர் அவர்களின் "புதிய கல்வித்திட்டத்தில் தொழில் முன்னிலைப் பாடநெறி" என்னும் கட்டுரையும் இம்மலருக்கு மேன்மேலும் மெருகூட்டுகின்றது

எங்கள் மலர் மணம்பெற விழைந்து கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், துணுக்குகள் முதலியவற்றை எழுதியுதவிய எம் மாணவர்கட்கு நன்றியுடையோம். எல்லோரினதும் கட்டுரைகளையும், கவிதைகளையும் பிரசுரிக்க இச்சிறு மலர் இடம் தராமைக்கு வருந்துகின்றோம். இம்மலருக்கு நல்லன கொண்டு அல்லன விலக்கும் நல்லறிஞர்களின் அரவணைப்பும், நல்லாசிகளும் கிடைக்கும் என்பது எம் துணிபு.

இம்மலர் பூரணப் பொலிவுற எமது மன்ற உறுப்பினர்களும் மன்றக் காப்பாளர்களும், மலர் ஆலோசனைக் குழுவினரும், எமது பெரும் தலைவர் அதிபர் அவர்களும் எடுத்த முயற்சிகள் அளப்பில இம்மலர் வெளியிடப் பெருநிதியை வழங்கிய பெரும் தலைவரான அதிபர் அவர்களுக்கும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய பெரியோர்களுக்கும், சிறப்புக் கட்டுரை தந்துதவிய ஆசிரியப் பெருந்தகை வித்துவான் க ந வேலன் அவர்கட்கும். விளம்பரங்கள் தந்துதவிய வர்த்தக ஸ்தாபனங்களுக்கும், விளம்பரம் சேர்த்துதவிய எமது மன்ற உறுப்பினர்களுக்கும், குறிப்பாக விளம்பரம் சேர்ப்பதில் முன்னின்றுழைத்த 1974-ம் ஆண்டின் இரண்டாம் பருவ நிர்வாகக் குழுவினருக்கும், இம்மலரைச் சிறந்த முறையில் அச்சிட்டுதவிய மலர் வெளியீட்டுப் பொறுப்பாசிரியர் திரு. த தியாகராசா அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மலருள் நுழைந்து அறிவுப் பசியைத் தீர்க்க ஆவலுடைய உங்களின் ஆர்வத்தைத் தடை செய்யாமல் உங்களிடம் இருந்து விடைபெற்றுக் கொள்கின்றோம்.

வை. இராஜேஸ்வரன்
M. S. K. மகேஸ்வரன்
மலர் ஆசிரியர்கள்.


With Best Compliments Of

AR. ES
Printers

140, K. K. S. Road
JAFFNA

வட இலங்கையில்

'மணிக்குரல்'
விளம்பர சேவை

0 வர்த்தகசேவை
0 திரைவிருந்து
0 நாடக அறிவிப்புகள்
0 நிகழ்ச்சி அறிவிப்புகள்
0 பிறந்ததின; திருமண மரணச் செய்திகள்

மணிக்குரல் இரட்டையர்
மக்கள் நவீனசந்தை
யாழ்ப்பாணம்

# திருப்பம்

**க. நடராசா 12 (வர்த்தகப்)**

கொழும்பு செல்லும் புகையிரதம் யாழ்ப்பாணம் ஸ்ரேசனில் தன் ஆயாசம் தீர உடலைக் குலுக்கிக்கொண்டு நிற்கிறது. பிரயாணிகள் முண்டியடித்துக்கொண்டு தங்கள் 'சீட்டை' ப்பிடிக்க விரைகின்றனர், நானும் அவர்களில் ஒருவனாக முண்டியடித்து ஏறிவிடுகிறேன். என்னைச்சுற்றிலுமுள்ள பிரயாணிகளை உற்றுநோக்குகிறேன்.

'கோணர் சீட்' கிடைக்கவில்லை என்பதனால் சலிப்படைந்த சிலர், கோணர்சீட் கிடைத்தும் வசதியாகக் கால் நீட்டமுடியவில்லையே என அங்கலாய்க்கும் சிலர், மற்றும் இரவு 'டினரை' வசதியாகச் சாப்பிட இடம் தேடும் சிலர் இப்படிப் பல பிரச்சனைகட்கிடையே தவிக்கும் மக்களைச் சிறிதும் பொருட்படுத்தாது 'கெட் கார்டின்' விசில் சத்தத்தினால் உந்தப்பட்டு புகையிரதம் புறப்படுகிறது.

என் கையிலிருந்த பத்திரிகையைப் பிரிக்கின்றேன், புதினம் எதுவுமே காணப்படவில்லை. வழக்கமான பல்லவி தான் கொலை, கொள்ளை, அடிபிடி விவாசரத்து. எல்லாமே பழையன தான். வெறுப்புமேலிட பத்திரிகையை மூடிவிடுகிறேன் நாவற்குளி, சாவகச்சேரி, கொடிகாமம். பளை....

நித்திராதேவி என்னை மெல்லென அணைக்கிறாள்.

'குரும்பை......குரும்பை......மாத்தையா...ஒனத?' குரும்பை விற்பவனின் குரல் என்னை இவ்வுலகத்திற்குக் கொண்டுவருகிறது, ஸ்ரேசன் எது என அறியும் ஆவலில் தலையை வெளியே எடுத்துப்பார்க்கிறேன்: —அனுராதபுரம்— கொழும்பிலிருந்து வரும் 'மெயில்' ரெயிலுக்காக புகையிரதம் காத்துநிற்கிறது. நான் காலாறுவதற்காக வெளியே உலவ அந்த சிறிய இடைவெளியைப் பயன்படுத்த எண்ணி உலவ ஆரம்பிக்கிறேன்.

'பார்லி... பார்லி... பார்லி...' பார்லி விற்பவனின் குரல் தடுக்கவே ஒரு பார்லியை வாங்கிச் சுவைத்தவாறே நடக்க ஆரம்பிக்கிறேன்.

'கொய்யா... கொய்யா... கொய்யா...'

'கஜஉ... கஜஉ .. கச்சான்கடலே...'

'தோடம்பழம்... தோடம்பழம்...'

'குரும்பை...... குரும்பை......'

தமது இறுதிநேர விற்பனையில் கண்ணும் கருத்துமாக இயங்கிக் கொண்டிருக்கின்றனர்; வியாபாரிகள். அவற்றிடையே

' வடை... வடை... மாத்தயா வடை ஓனத...?'

வடைவிற்றுவந்த சிறுவனின் குரல் என்னை ஈர்க்கிறது. நான் அடிக்கடி எங்கோ கேட்ட குரல்போலிருந்தது அவன் குரல், அவனை உற்று நோக்குகிறேன்.

ஒட்டியுலர்ந்தமுகம் . நித்திரையின்றி விழித்து வீங்கிப் போன விழிகள். வதனத்தில் இன்றும் குழந்தைத்தனம் மாறாத தன்மை. வயதுபதினான்கு இருக்கலாம், எனக்குள்ளே ஒரு சிறு சபலம்.

' அவன் இவனாக இருக்கலாமோ ? ' எனக்குள்ளேயே கேட்டுக் கொள்கிறேன். அவனை அறியும்ஆவலில் மெதுவாக அவனை அழைக்கிறேன். என்னருகேவந்து அமைதியாக நிற்கிறான்.

'நீ ஆனத்தரின் மகன்சங்கர் தானே ?' என் சந்தேகத்தைத் தீர்க்கும்வகையில் முதல்படியாக அவனைக் கேட்டுக் கொள்கிறேன், அவன் முகத்தில் சலனத்தின் சாயல். ஒரு நிமிடத்திலேயே எண்ணற்ற எண்ணக்கோடுகள் குத்திட்டு நிற்கின்றன, திரும்பவும் அதே கேள்வியை அவனிடம் கேட்கிறேன், அவன் திக்கித்திணறியவாறு ,,ஆமா, நீங்க ......'' அவனின் பதிலால் எனது சந்தேகம் தீருகிறது. 'நான் தான்டா ... உன் ராம் மாமா. என்னைத் தெரியவில்லையா? •'' ராம் மாமா '' ஆவலில் என்னைக் கட்டிக்கொள்கிறான். அந்த அணைப்பு இரண்டுவருடங்களுக்கு முன் அவனுக்குப்

பாடம் சொல்லிக் கொடுக்கும்போது கொஞ்சும் மழலையால் மயங்கவைத்து என்னைக் கொஞ்சினனே அந்த உலகிற்கு அழைத்துச் சென்றது.

சங்கர் எங்கள் அயல்வீட்டிலிருக்கும் ஆனந்தரின் அன்பு மகன். ஆனந்தருக்கும் அவர்மனைவி சந்திராவுக்கும் செல்வப் புதல்வன், அவர்கள் தம்அருமைப் புதல்வனைக் கண்ணெனப் போற்றிப் பொன்னென வளர்த்துவந்தனர், அளவுக்கு மீறிய ஆனந்தரின் அன்பு சங்கருக்குக் கூடவே அடங்காப் பிடாரித்தனத்தையும் உருவாக்கிவிட்டது.

அப்பொழுது சங்கருக்கு வயது பதினொன்று இருக்கும். நண்பர்களுடன் ஊர்சுற்றிவிட்டு வந்தசங்கரை ஆனந்தரின் அன்பானபேச்சு ' சருக் ' கென்று தைத்துவிட்டது, அவன் கூறியதெல்லாம் இதுதான். ' சங்கர் உன்னைப் படிக்கவைத்துப் பலரும் புகழவைக்க வேண்டுமென்பது என் எண்ணம். அதனைப் புரிந்து நடந்துகொள். இனியாவது இப்படிநடந்துகொள். ' இந்த அன்புக் கட்டளை சங்கருக்கு வேம்பு போல் கசந்தது. அன்றிரவு யாருக்கும் தெரியாமலே வீட்டைவிட்டு வெளியேறிவிட்டான். அதன்பின் இன்றுதான் அவனை நான் சந்திக்கிறேன்.

' ராம் மாமா, எங்க அப்பா அம்மா எல்லாம் சுகமாக இருக்கிறாங்களா ? '' ஆவலுடன்கேட்டான் சங்கர்.

', ஆமா, இப்போதான் உன் பெற்றோரின் ஞாபகம் வந்ததா? '' முகத்தில் கடுமையை வரவழைத்துக் கொண்டே கேட்டேன், "இல்லே மாமா இப்போதான் உண்மையிலேயே நான் மனம் வருந்துகிறேன். எங்க அப்பாவும் அம்மாவும் எவ்வளவு கஷ்டப்பட்டு படிப்பிச்சாங்க. ஆனால் கூடுதலாச் சுதந்திரத்தையும் கொடுத்திட்டாங்க. அதனாலதான்மாமா அப்படி நடந்துட்டேன். மாமா, நான் வீட்டைவிட்டுவெளியேறிப் பல கஷ்டங்களை அனுபவிச்சிட்டேன். இப்போ இந்தத் தொழில்தான் என் வயத்தைக்கழுவ உதவுது மாமா. நான் ஒண்ணு கேட்பன்.... கதைத்து நிறுத்திவிட்டு என்னிடம் ஏதோ எதிர்பார்த்தவாறே கேட்டான்.

" என்ன சங்கர் என்னவேண்டும் தயங்காமல்கேள் " என்றேன். மாமா, நான் இப்போ வீட்டுக்குப்போனு எங்க அப்பா அம்மா எல்லாம் என்னை ஏற்றுக் கொள்வாங்களா? நான் திரும்பவும் படிச்சு அப்பாவின் ஆசையை நிறைவேற்றி வைக்கமுடியுமா? மாமா, சத்தியமாகச் சொல்லுகிறேன். " மாமா இனி நான் அப்பா சொல்லுக்கு எதிராக நடக்கமாட்டேன். " அவன் கண்களில் நீர்த்துளிகள் பனித்து நிற்கின்றன. அடங்காப்பிடாரித்தனத்தால் நல்லஒருபாடம் முடிவிலே அவனுக்குக் கிடைத்திருக்கிறது.

'சங்கர்' நான் உன்னை உங்க அப்பா அம்மாவிட்ட கொண்டுபோய் விட்டுவிடுகிறேன், நீ உன் தவறை உணர்ந்துஎப்போ திருந்திஞயோ அப்போதே உன் அப்பா அம்மா உன்னை ஏற்றுக் கொண்டுவிட்டார்கள் என்பதை நினைத்துக்கொள். எப்போ மனிதன் தான் தவறுசெய்துவிட்டதை உணர்ந்து திருந்துகிருனே அப்பொழுதே அவன் முழு மனிதனுகிவிடுகிருன். இப்பவே புறப்படு. உன் அப்பா அம்மா உன்னைக் கண்டா எவ்வளவு களிப்படைவார்கள் தெரியுமா ?"

யாழ்ப்பாணத்தை நோக்கிச்செல்லும் புகைவண்டி ஸ்ரேசனில் வந்துநிற்கிறது. சங்கரின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடுகிறது. அவன் கையைப் பிடித்தவாறே அவனை அப்புகைவண்டியைநோக்கி அழைத்துச்செல்கிறேன்,

அவன் வாழ்வில் ஏற்படப்போகும் ,திருப்பத்தை' எண்ணி மகிழ்ந்தவாறே நானும் அவனுடன் புகைவண்டியில் ஏறுகிறேன்.

'ஹெட் காட்டின்' விசில் சத்தத்திஞல் புகையிரதமும் புறப்படுகிறது. சங்கரின் வதனத்தில் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் சிறப்பின் சாயல் புலப்படுகிறது.

'தன்னை நல்வழிப்படுத்தும் முயற்சியில் ஈடுபடும்போதுதான் மனிதன் மனிதனுகிருன்.'

விவேகானந்தர்

# எங்கள் அதிபர்

**வை சிவகுமார் 10. விஞ்ஞானம்**

கறுத்தக் காரில் வருவாராம்
களிசான் சேட் [டு] அணிவாராம்.
பிள்ளைபோல மாணவரை அவர்
பேணி நல்லுரை புகல்வாராம்

ஹிந்தி வந்தால் ஏசுவாராம்
பிரார்த்தனை மண்டபம் வருவாராம்
சிந்தித் தன்பாய்ப் பேசுவாராம் அவர்
செயலில் தன்னலம் அற்றவராம்

கறுத்தக் காரைக் கண்டுவிட்டால்
கலைந்தே மாணவர் செல்வராம்
பள்ளிச் சிறுவர் பிழைசெய்தால் அவர்
பயன்பெறவே மிக ஒறுப்பாராம்

வெள்ளையுள்ளம் உடையவராயினும்.
மிகவும் கண்டிப் பானவராம் அவர்
செல்லும் வழியில் நாம்சென்றால்
சிறந்தவ ராகவே வாழ்ந்திடலாம்

# சிந்தனையின் விந்தை இது!

இ. மேரி ஆன். இமெல்டா 11 (கலை)

மனிதன் ஒரு சிந்தனைச்சிற்பி. அவன் எத்தனை எத்தனையோ வகைகளில் சிந்திக்கிறான். அவனது சிந்தனையின் திறனே இப்போது நடை போட்டுக்கொண்டிருக்கும் இந்த நாகரிக உலகம். எப்படியெல்லாமோ இருந்த இந்த உலகம் இப்படியாகமாற்றத்தை, மறுமலர்ச்சியை, நாகரிகத்தின் உச்சக் கட்டத்தை அடைவதற்குக் காரணம் மனிதனின் சிந்தனையின் விந்தையே.

மனிதன் தன்னுடைய சிந்தனைத்திறனால் எல்லாவற்றிலும் மாற்றத்தைக் காண்கிறான். ஆனால் தன்னிலே மட்டும் மாற்றத்தைக் காண முடியாமல் தவிக்கிறான். காரணம். ''ஊருக்கு உபதேசம் செய்யும் பல்லி கூழுக்குள் விழுந்த கதைபோல்'' மனிதன் தன்னைப்பற்றிச் சிந்திப்பதேயில்லை இவ்வுலகில் புரட்சிகள், போட்டிகள், பொறாமைகள் ஏற்படுவதற்குக் காரணம் ஒவ்வொருவரும் தன்னைப் பற்றிச் சிந்திக்காமல் விடுவதே, ஏன் என்ற கேள்வி இங்கு கேட்காமல் வாழ்க்கை இல்லை' என்று பாடினார் கவிஞர் ஒருவர். ஏன் என்ற கேள்வியிலே உருவாகியதுதான் விஞ்ஞானம், நான் யார்? என்ற கேள்வியிலே உருவாகவேண்டியது தான் இறைஞானம், 'ஏன்' என்ற அந்த இரண்டு எழுத்துக்களாலான ஒரு சொல்லை ஒவ்வொருபொருளின் முன்னும் வைத்தான். விஞ்ஞானி, அதைப்பற்றிச் சிந்தித்தான், அதன்மூலமாக விஞ்ஞானத்திலே விளையாடினான். விளையாடிக்கொண்டே இருக்கிறான். நான்யார் என்ற நான்கு எழுத்துச் சொல்லலாகிய ஏவுகணையை சிந்தனை என்ற வில்லிலே பூட்டி நாணேற்றினால் ஒவ்வொருமனிதனும் ஒப்புயர்வற்ற தலைவனாக விளங்குவான். சிந்தித்தால்மட்டும் போதாது, அச் சிந்தனையோட்டங்கள். வாழ்க்கையிலே செயல்பட வேண்டும்.

'' தன்னலத்தை ஒழி. தலைவனுவாய் '' என்று புகல்கின்றன உலக மதங்கள். ஆம், அவன் தன்னலத்தை அடக்கிதன்னி லே பற்றற்று வாழ்ந்தால் அவன்தான் மக்களுள் மாணிக் கமாகத் திகழ்வான். அவன் தான் தியாகத்தின் செம்ம லாகத் தோன்றுவான்

தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தவர்களின் வரிசையிலே எத்தனையோ பெரியார்களின் பெயர்கள் குறி ப்பிடப்பட்டிருக்கின்றன, அவர்கள் தங்களைப் பற்றிச் சிந் தித்தார்கள். புத்தர், யேசு, காந்தி, போன்றோர் உண் மையிலே தியாகத்தின் செம்மல்களேதான். ஏனெனில் இவர் கள் தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த பிறர்க்கு ரியாளர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக காலத்தைக் கடந்து என்றும் நிகழ்காலத்திலேயே வாழ்ந்து கொண்டிரு க்கும் முழுமுதற் பொருளாகிய கடவுள் என்றும் ஒரே சிந்தனையில் தான் மூழ்கித்திளைத்துக் கொண்டேயிருக்கிறார் அந்த ஏக சிந்தனையையே செயலாற்றிக் கொண்டும் இருக்கிறார்.

ஆகவே, வருங்கால சமுதாயத்தை வளமாக உருவா க்கவிருக்கும் மாணவர்களே! தனிமையில் நம்மைப்பற்றிச் சிந்திப்போம். வாழ்வை வளமாக அமைக்க முயற்சிப்போம் நற் சிந்தனையின் விந்தை, வாழ்விற்கு வழி காட்டட்டும். ஒளியைக் கொடுக்கட்டும்.

பொறுமை என்பது கசப்பானது. ஆனால் அதன் பழம் இனிப்பானது.

ரூசோ

உண்மை மனிதனை உயர்த்துவதில்லை. மனிதன் தான் உண் மையை உயர்த்துகிறான்.

கொன்பூசியஸ்

உண்மையான கட்டுப்பாடுடையவனே உண்மையான சன நாயக வாதி.

காந்தி

# புதிய இலங்கையில் நான்விரும்புவது

க. தயானந்தராசா 11 (வர்த்தகம்)

இன்று நாம் இலங்கையில் எங்கு பார்த்தாலும் வறுமை துன்பம், சனநெருக்கடி போன்ற பலபிரச்சனைகளைக் காணக் கூடியதாயிருக்கிறது. ஆம்! இலங்கை என்று கூறும்போது அதை உயிரற்ற ஓர் உருவமாகப்பலர் கருதுகின்றனர். அது ஏட்டில் பார்க்கும்போதுதான் உருவமேயன்றி எமது சிந்தையால் பார்க்கும்போது உணர்ச்சியுள்ள, உயிருள்ள ஓர் உன்னத ஓவியம் என்பதை மக்கள் அறியக்கூடியதாயுள்ளது. ஆனால் இதை எல்லோரும் உணர்வதில்லை. ஒரு நாட்டுக்கு சிறு விழுப்பமோ வீழ்ச்சியோ ஏற்படினும் அது அந்நாட்டு மக்களையே சாரும்.

இன்று இலங்கையின் மீது நாம்சிறு கண்ணோட்டமிட்டு ஆராய்வோமானால் அதன் நிலைமைகளை நாம் காணக் கூடியதாகவுள்ளது. எமது நாட்டு மக்களின் வறுமைக்குக் காரணம் என்ன? துன்பநிலைக்குக் காரணமென்ன? பசியாலும் துன்பத்தாலும் மூழ்கித்தவிக்கும் பச்சிளம் பாலகர்கள் தம் அன்னையின் முகத்தைப் பார்த்து ''அம்மா பசிக்கின்றதே'' என்று கேட்கும் போது அவ்வன்னையின் கண்களிலிருந்து இரத்தக்கண்ணீரே அக்கேள்விக்கு விடையாக வருகின்றது, இன்னும் எத்தனையோ கையற்ற, காலற்ற முடவர்கள் தெருவோரங்களில் கிடப்பது ஏன்? இந்நிலைமைகளுக்கெல்லாம் காரணம் எமது நாட்டுமக்களே. மக்களே தம் மீது பழியைச் சுமத்திக் கொண்டு நாட்டில் பஞ்சப்பறைசாற்றினால் நாடு எப்படி முன்னேறுவது? இவைகள் எல்லாம் மக்களின் சோம்பேறித் தன்மையைக் காட்டுகின்றது. இதை யான் வெறுக்கின்றேன்.

மக்கள் தமது சுயநலத்தைக் கருதி தம் சொத்துக்களை தமக்கென மட்டும் ஒதுக்குவதால் நாடு பொருளாதாரத் துறையில் தக்கமுதலீடின்றி வீழ்ச்சியடைந்து வருகின்றது. நம் நாடாகிய இலங்கையை மீண்டும் ''இந்துசமுத்திரத்தின் முத்து'' என்று கூறும் நிலைக்கு கொண்டு வரவேண்டுமாயின் நாட்டின் கண்ணாக விளங்கும்ஒவ்வொருமக்களும் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைக்கவேண்டும்

சிந்தினுல் மட்டும் போதாது. அவற்றை முத்துக்களாகப் பெறவேண்டும். அரசிடம் கையேந்தி பிச்சைகேட்பதில் அவமானமில்லை. ஆனுல் அப்பிச்சைகளையெல்லாம் நன்ருகப் பயன்படுத்தவேண்டும். இதனுல் நம் நாடு ஆசியாக்கண்டத்தின் ''தானியக்களஞ்சியமாக'' விளங்கும் என்பதற்கு சான்று வேண்டியதில்லை இதையே நான் எனது தாய்நாடாகிய இலங்கையில் விரும்புகிறேன். இல்லை. எம் நாடே விரும்புகின்றது.

எல்லாவற்றிற்கும் மேலாக நான் விரும்புவது ஒற்றுமையையே ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'' என்ற மொழிக்கிணங்க நம்நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று எண்ணி தொழிற்படுவார்களேயானுல் நாட்டின் செல்வவளம் செழித்தோங்கும் என்பது திண்ணம். எனவே ஒற்றுமையை எமது நாட்டு மக்கள் விரும்பவேண்டும்.

பொருளாதாரத் துறையில் மாத்திரமில்லை, வர்த்தகத் துறை, கைத்தொழில்துறை, இன்னும்சகலவிதமான துறைகளிலும் எமது நாடு முன்னேறவேண்டுமென்பதே எனது அடுத்த பேரவா.

''கடவுளைநம்பினோர் கைவிடப்படார்'' என்றபழமொழியின் படி எமது இயற்கையன்னையை நம்பி நாம் தொழிற்படுவோமேயானுல் நம் நாடாகிய ஈழம் முன்னேற்றமடையும் என்று கூறலாம்.

நம் நாட்டுமக்களில் சிலரை எடுத்துக்கொண்டால் பொதுவாக அவர்கள் அரசாங்க உத்தியோகத்தையே நாடுகிருர்கள். ஆனுல் 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்' எனும் மொழியை இவர்கள் மறந்துவிட்டார்கள்! இம்மொழியின் உட்கருத்தை இவர்கள் நன்கு ஆராய்வாராஞல் இன்றே உணர்ச்சிவசப்பட்டு தமது மடிப்புக்கலையாத ஆடைகளைக் களைந்துவிட்டுப் பேனாபிடித்த கையை உதறிவிட்டுக் கலப்

பையைக் கையில் பிடித்துக்கொண்டு களனியில் இறங்கிவிடு வார்கள். ஆனால் அக்குறளின் பொருளை உணராமல் இன்னமும் அரசாங்கத் தொழிலையே நம்பியிருப்போரின் அறியாமையை எவ்வாறு போக்குவதோ தெரியவில்லை.

இன்று நம்நாடு வேற்றுநாடுகளிடம் கையேந்தி நிற்கிறது. யாருக்காக? எமக்காகத்தான், இந்நிலைமை நீடிக்காதபடி ஈழமணித்திருநாட்டிற்கு உதவுதற்கு உணர்ச்சியுள்ள மக்கள் எழுச்சிபெறுவதை நான் பெரிதும் விரும்புகிறேன்.

நாம் மற்றொன்றையும் மறந்துவிடக்கூடாது, அதாவது நாடும் வீடும் எமது இருகண்கள். இலங்கை ஒரு வல்லரசு நாடாக மாறுவதையும் நான் மனமார அவாவுகின்றேன். 'செல்வமணியாம் ஈழமணி' எனக் கேட்பதற்கு யாம்மீண்டும் ஒரு பிறவியெடுக்காமல் இப் பிறவியிலேயே அதனைக் கேட்கும் வாய்ப்பைப் பெறவேண்டும்.

நம் நாடு நான்குபக்கமும் கடலாற் சூழப்பட்டுள்ளது. நமக்குத் தேவையான கடல்வளங்களைக் குறைவில்லாமற் பெற்றுச் சிறக்கவேண்டும், மேலும் நாம் கல்வித்துறையையும் கவனிக்கவேண்டும், கல்வியே முன்னேற்றத்தின் திறவுகோல். இதனால் ஒவ்வொருவருக்கும் கல்வி வசதியளித்தல் அவசியம். ஆனால் இவை மட்டும் போதா.

அகிம்சா மூர்த்தியாம் அண்ணல் காந்தியைப்பின்பற்றி எமது ஈழத்தைக் கட்டியெழுப்புவோம். அவரைப் போலவே நாமும் கைத்தறி ஆடைகளைநெய்து உடுத்துஎமது ஆடைப் பிரச்சனையை அகற்றுவோம், 'செய்யும் தொழிலே தெய்வம் அதனால் உண்டாகும் பயனே நம் செல்வம். எனவே நாம் எமது சொந்தத் தொழில்களை நல்ல முறையில் அபிவிருத்தி செய்து நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவோமேயானால் நம்நாடு எமது கையிலேயே இருக்கும். எனவே தோழர்களே! உமது உறக்கத்தை விடுத்து விழியுங்கள் நாளைய நாளை நினையுங்கள். நன்றாயுழைத்து வாழுங்கள்!

# தென்றலுக்கு ஜாதியில்லை

ஜீவமலர் நடராஜா 12. கலைப்பிரிவு

பார்க்குமிடமெல்லாம் பசும் பொன் மலரினங்கள்
கார் வண்ணச் சிறகுடைய கருநிற வண்டினங்கள்
நீர்ச் சுனைகளிலே நிறைந்திட்ட தாமரைகள்
நேர் பார்த்து நான் நிலை பிறழ்ந்து நின்றிட்டேன்.

தேன் பிலிற்றும் வண்ணவிதழ் வெண்மல்லிகை
மீன் பாயும் நீர்ச் சுனையில் மடல் அவிழ் தாமரை
மான் போன்ற மங்கையரின் குடைமல்லிகை யாவும்
கான் கலந்து ககனத்தில் கோலமிட்டனவே.

இனிமை சொட்டும் இளம் தென்றல் எங்கும்
கனிந்து அவற்றைக் கலந்து மகிழ்ந்து சென்றது
தனிமையில் நான் தயங்கி மயங்கி நின்றிடவே
பனித் தென்றல் என்னையும் பரவித்தழுவிச் சென்றது

விந்தை கொள்ளும் இவ்வியப்பு மிகு செய்கையிலேஎன்
சிந்தையில் பட்டது ஒரு சிந்தனைக் கேள்வி?
மந்தைக் கூட்டம்போலும்மலர்க்கொத்தைத் தென்றல்
சிந்தித்துத் தான் தழுவிச் செல்கின்றதோவென்று

அழகு மணம் பார்த்துத் தென்றல் தழுவுவதில்லை
பழகுகின்ற மனிதர் தாம் ஜாதி பார்ப்பதும் ஏனோ?
குளம் என்றும் குட்டைஎன்றும்தென்றல்பார்ப்பதில்லை
களம் வகுத்து மக்களினம் வாழ்வதும் ஏனோ?

இனமென்றும் ஜாதியென்றும் ஒன்றில்லையடா
மனமொன்றில் அன்பு ஒன்றே போதுமாடா
மனமில்லாத் தென்றல் கூட இனம் பார்க்காதபோது
மானமுள்ள நீ இனம் பாப்பதும் ஏனடா?

# உணவுப் பாதுகாப்பு

## ஏ. பேர்னுட் 12. விஞ்ஞானம்

மனிதன் என்று உண்ணத் தொடங்கினுனே அன்றே உணவைச் சேமிக்கும் முயற்சியும் தொடங்கி விட்டது. நாடோடியாக அலைந்த மனிதன் உணவுத் தொழிலில் ஈடு பட்டபோது உணவைச் சேமித்துவைக்கத் தொடங்கினுன் தற்பொழுது மக்கள்தொகை அதிகரித்தமையால் உணவுத் தட்டுப்பாடு எற்பட்டுள்ளது. இதனுல் ஒரு பருவத்தில் தேவைக்கதிகமாகக் கிடைத்த உணவை அது கிடைக்காத மறு பருவத்திற்காகச் சேமித்தல் அவசியமாமிற்று.

உணவு இயல்பாகவும் பிறகாரணங்களாலும் கெடக் கூடியது. தாவர.விலங்குப் பொருட்களிலுள்ள நொதியங் கள் உணவுப் பொருட்களில் பெரும் மாற்றங்களைச் செய் கின்றன, மேலும் நுண்ணுயிர்களும், பூச்சியினங்களும் காற்றிலுள்ள ஈரப்பதன் தூசி முதலியனவும் உணவுப் பொ ருட்களைக் கெடச் செய்கின்றன. இவற்றில் நுண்ணுயிர்க ளில் அழுகல்வளரிக்குரிய பங்கசுக்களும் பற்றீரியாக்களும் கூடிய கெடுதி விளைவிக்கக்கூடியவை.

பற்றீரியாவால் உண்டாக்கப்படும் நச்சுப்பொருட்கள் பல உயிர்களைக் கொல்கின்றன. சில வகைப் பற்றீரியாக் கள் உணவுப் பொருட்களில் நஞ்சை உண்டாக்குகின்றன. இவை மூன்று வகைப்படும், அவையாவன சல்மோவெல்லா வகை, ஹடபிலோவகை, குளொஸ்திரிடியம்பெற்றுலிசம் வகை என்பனவாகும் சல்மோனெல்லாவகை பற்றீரியா எலி, மாடு வாத்து போன்றவற்றின் மூலம் உணவுப் பொ ருட்களை வந்தடைகின்றன, இவை உணவுப்பொருட்களு டன் சேர்ந்து நச்சுத்தன்மையை உண்டாக்குகின்றன. இந்த உணவை உண்ணும்போது உடலினுள் நச்சுப்பொருள் பரவு கிறது. ஸடபிலோ கோக்கசசு இலிப்பிட் பதார்த்தங்களைக்

கொண்ட உணவுப்பொருட்களுடன் எளிதாக வளரக்கூடியது. இப்பற்றீரியா எண்டரோரொடொக்சின் என்ற நச்சுப் பொருளைச் சுரக்கும். குளொஸ்றீரியம்பொடுலினம் என்ற பற்றீரியாக்களால் உண்டாக்கப்படும் நஞ்சுகள் வேறுபட்டவை. அவை ஒட்சிசன் உள்ள இடங்களில் வாழமாட்டா, இவை காற்றில்லாத இடங்களில் வைக்கப்பட்ட உணவில் வளர்ந்து நச்சுத்தன்மையை உண்டாக்குகின்றன.

உணவைப் பாதுகாக்கப் பலவழிகள் கையாளப்படுகின்றன. உணவிலுள்ளகிருமிகளை வெப்பத்தால் அழித்துப் பின் காற்றை அகற்றுதல். உணவை வற்றல் போடுதல், உப்பிடுதல், புகையிடுதல் பாதுகாப்புப் பொருட்களைக் கூடச்சேர்த்தல் ஆகியன அவற்றில் பிரதானமானவை. கேடு விளைவிக்கும் நுண்ணுயிர்களைக் கொல்வதற்கு ஒருவழி உணவுப்பொருட்களைச் சூடாக்குதலாம், அத்துடன் ஊதாகடந்தகதிர்களையும் உபயோகிக்கலாம். பொதுவாக உணவுப்பொருட்கள் இருக்கும் இடங்களில் வெப்பநிலையைச் சரிவரக் கவனித்துக்கொண்டால் உணவுச்சேதம் குறையும்.

உணவுப்பாதுகாப்புமுறைகளில் மிகவும் தொன்மையானதும் வீடுகளில் சாதாரணமாகக் கையாளப்படுவதுமான முறை உலர்த்துதலாகும், பற்றீரியா வளர்வதற்கு 30 சதவீதத்திற்கு மேற்பட்ட ஈரலிப்பு அவசியமாகும். எனவே ஈரலிப்புச் சதவீதத்தை குறைப்பதன்மூலம் இவற்றின் வளர்ச்சியைத் தடைபண்ணலாம். உலர்த்துதலே இதற்கு உகந்த வழியாகும். நமதுநாட்டில் சூரியவெப்பம் உலர்த்தும் கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது, சூரியஒளி கிருமிகளைக் கொல்லும்தன்மையுள்ளது, ஆகவே இச் செய்முறையின்மூலம் பழங்கள் வற்றலாகவும் மீன், இறைச்சி முதலியவற்றைக் கருவாடுகளாகவும் பாலை உலர்த்தியமாவாகவும் பாதுகாக்கலாம்.

மிகக்குறைத்த வெப்பநிலையில் பற்றீரியாக்களின் தொழிற்பாடு அற்றுப்போகிறது. ஆனல் பற்றீசியாக்கள் அந்நிலையிலும் உயிருடனிருக்கும். பல நாட்களுக்கு விடப்பட்டால் அவை அச்சூழலில் தம்மை இயைபுடையதாக்கித் தொழிற்

பாட்டை தொடங்கிவிடும். 0 பாகையிலும் குறைவான வெப்பநிலையில் அவை இறந்துவிடும் ஆனால் அவற்றின் வித்திகள் இறக்கமாட்டா. இரண்டொரு நாட்களுக்கு உணவுப் பொருட்களைப் பாதுகாக்கவேண்டுமானால் குளிர் சாதனப் பெட்டிக்குள் பாதுகாக்கப்படலாம். அதிகநாட்களுக்கு வைத்திருக்கவேண்டுமானால் 0 பாகை (ச) அளவிலும்குறைவான வெப்பநிலையில் வைத்திருக்கவேண்டும், மீன், இறைச்சி முதலியன இம்முறையில்லைய பாதுகாக்கப்பட வேண்டும். பாலைப் பாய்ச்சர் முறையில் சுத்திகரிக்கலாம். இம் முறையில் சில நோய்களை விளைவிக்கும் பற்றீரியாக்கள் மட்டுமே அழிக்கப்படக்கூடியனவாம்.

வெளிச்சூழலின் செறிவை அதிகரிப்பதனுல் நுண்ணுயிர்க் கலங்களில் புறப்பிரசாரணம் ஏற்பட்டு அவை அழிக்கப்படுகின்றன. உதாரணமாக மீன், இறைச்சி போன்றவற்றிற்கு உப்பிடுதலையும் அவற்றை உலர்த்துதலையும் குறிப்பிடலாம். சில இறைச்சி வகைகள் உப்பிட்டுப் புகையூட்டப்பட்டும் பாதுகாக்கப்படுகின்றன. புகையூட்டலால் ஏற்படும் பாதுகாப்புத்தன்மைக்கு அதிலுள்ள கிரியோசோட்டு போமல்டிசைட், பைரோலிக்னியஸ் அமிலம் போன்றவையே காரணமாகும். பழச்சாறு, பழரசம் போன்றவற்றின் பாதுகாப்பில் அதிகளவு வெல்லம் சேர்க்கப்படுகிறது. விணுகிரியில் மரக்கறிவகை பாதுகாக்கப்படுகின்றன.

உயிருள்ள சேமிப்பு இழையங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமானுல் அவற்றின் அரும்புகள் வளராமல் இருப்பதற்கு ஓமோன்கள் தெளிக்கப்பட வேண்டும். புட்டிகளில் அடைத்தல் என்ற முறையில் உணவுப்பொருட்களை சூடாக்குவதனமூலம் நுண்ணுயிர்களைக் கொன்று நொதியங்களின் தொழிற்பாடு தடுக்கப்பட்ட பின்னரே அவை புட்டிகளில் பேணப்படுகின்றன. இவை தகுந்த பாத்திரங்களில் அடைக்கப்படவேண்டும். ஏனெனில் அவைகூட நஞ்சாகமாறலாம். பழவகைகளும் பக்குவப்படுத்தப்பட்ட இறைச்சிவகைகளும் அமிலத்தன்மை கொண்டவை. இவை பாத்திரத்தின் சுவர்களிலுள்ள உலோகப்பொருட்களில் தொழிற்பட்டு நஞ்சாக

மாறும், உதாரணமாக இரும்புப் பாத்திரங்களில் அப்பிள் பழம் போன்றவற்றை வைக்கும்போது அவற்றின் அமிலத் தன்மை காரணமாக பாத்திரத்தில்உள்ள நாகப் பொருட்க ளுடன் கரைகின்றன. எனவே அப்பிள் பழத்துடன் நாகம் சேருவதால் அப்பிள்பழம் நஞ்சாகிறது, புட்டிகளில் வைக் கப்பட்ட எலிமுச்சை, தோடை போன்றவை புட்டிகளில் உள்ள பூச்சுப்பொருளில் கலந்துள்ள அந்திமனி என்னும் உலோகத்தைக் கரைத்து நஞ்சாக மாற்றுகிறது உணவுக்கே பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள இக் காலத்தில் நமக்குக் கிடைக்கும் உணவையாவது மேற்கூறிய முறைகளில் பாது காக்க முற்படுவோமாக.

அதிகம் அன்பு செலுத்தியவனும் அடிக்கடி சிரித்த வனும் நன்ருக வாழ்ந்தவனுகிருன். ஸ்ரான்லி

ஆரோக்கியம் என்பது சுகதேகி அணிந்திருக்கும் ஆபரணம். ஆனுல் அது சுகதேகியின் கண்ணுக்கே புலப் படுகிறது. எகிப்தியப் பழ்மொழி

வீட்டைவிட்டுப் புறம்படும்போது ஒரு முறையும் விமா னத்தில் ஏறும்போது இரு முறையும் விவாகம் செய்யு முன்னர் மூன்று முறையும் கடவுளைத் தியானி.

இரசியப் பழமொழி

தன்னை நல்வழிப்படுத்தும் முயற்சியில் ஈடுபடும் போதுதான் மனிதன் மனிதனுகிருன், விவேகானந்தர்

நாம் எவ்வளவு அறிவாளிகளானுலும் படித் துக் கொண்டிருப்பவர்களே. யாருமே எல்லாம் படித்தவர் களல்ல. படிப்பிற்கு முடிவே இல்லை. நிக்சன்

தொகுத்தளித்தவர்- கிருஷ்ணகுமாரி கேத்தீஸ்வரதாசன்
11. (கலை)

# வண்ண ஓவியம் வாய்திறந்தது

**S. மாலதி 11. கலைப்பிரிவு**

அடர்ந்த கானகத்தின் மத்தியிலே காலதேவனின் கை வரிசைகளுக்கெல்லாம் இடம்கொடுத்துக் கம்பீரமாக நிற்கின்றது சிகிரிக்குன்றம். அது அனுராதபுரியிலிருந்து ஏறக்குறைய 45 மைல் தொலைவிலுள்ளது, அம்மலையின் பழைய வரலாறுகள் அங்குள்ள அற்புதங்களையெல்லாம் கதை கதையாக அளப்பதைக் கேட்டு நானும் ஒரு முறையாவது அக்குன்றத்தைப் பார்வையிட வேண்டுமென ஆவலுற்றேன், நெடுநாளாகக் கொண்டிருந்த எனது ஆவலை நிறைவேற்ற நான் முன்னர் படித்தபாடசாலை ஒரு வாய்ப்பளித்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. அதிகாலை நான்கு மணிக்கே நானும் எனது வகுப்பாசிரியையும் சக மாணவிகளும் ஒரு பஸ் வண்டியிற் புறப்பட்டோம். காலை எட்டுமணியளவில் சிகிரிக் குன்றத்தையடைந்தோம்,

சிகிரியின் கதையோ மிகவும் சோகமானது, சூழ்ச்சியில் உருவாகி அழகுக் கலைகளினால் மிளிர்ந்து சோகத்தையே முடிவாகக் கொண்டது அக்குன்றம் என்ற எண்ணம் எனது சிந்தனைக்கு வந்தது. வாழ்க்கையில் எல்லாச் சுகபோகங்களையும் அனுபவித்த யுவதி ஒருத்தி பாட்டியின் நிலைமைக்கு வந்ததைக் காட்டிக்கொண்டிருக்கிறது. அக்குன்றம். அதன் வளங்கள் சிறப்புக்கள், இயற்கைஅழகுகள் யாவும் இன்றி அப்பாட்டி நிலைதளர்ந்து உயிர்வாழ்வது போன்றிருக்கிறது அதன் தோற்றம்.

சிகிரிக்குன்றத்தின் அடிவாரத்திலிருந்து அதன்உச்சியை அடையப் பலநூறு படிகள் ஏறவேண்டும். சிகிரியைக்கண்டதும் என் மனம் பீதியுற்றது. கால்கள் நடுநடுங்கின. ஆனால் என்னுடன் வந்தவர்கள் மலையின் உருவத்தைக்கண்டு சிறிதும் மலைக்காது ஏறத்தொடங்கினர். குன்றில் ஏறத்துணியாது கீழே நின்றுகொண்டிருந்த என்னை எங்கிருந்தோ கேட்ட 'கலகல' என்ற சிரிப்பொலி வியப்பில் ஆழ்த்தியது.

ஏதாவது மோகினிப்பிசாசின் வேலையோ என்று என் எண்ணம் அலைபாயத்தொடங்கியது, அப்பொழுது 'தங்கையே! கண்ணை விழித்துப்பார். நீ என்னை மோகினிப் பிசாசு என எண்ணுகிருயோ? நீ எந்த அழகின் சிருட்டியைக் காண வந்தாயோ அந்தஅழகின்சிருஷ்டி நான் தான்.' எனஅங்கிருந்த ஓவியம் பேசத்தொடங்கியது, மீண்டும் அந்த ஓவியம் ''இவ்வழகின் சிருஷ்டியைப் பார்க்க வருபவர்களெல்லாம் உன்னைப்போன்ற தொடைநடுங்கிகள்தான். ஆனல் நீ ஒரு கலையுணர்வுபடைத்தவள் போல் தோன்றுகிறது. என்னுடைய மனதில் புதைத்திருக்கும் இரகசியங்களைக்கூறுகிறேன். கேள் ''என அவ்வண்ண ஓவியம் வாய்திறந்தது.

''தங்கையே! அதோபார்! அங்கு ஒருஅழகிய இராசகுமாரி கையிலே தாமரைமலருடன் நிற்கிருள். அவளுக்குப் பின்னல் அவள் தோழிப் பெண்கள் விநயத்துடன் நிற்கின்றனர், அவர்களைப் பார்க்கும்போது என்ன எண்ணுகிருய் எனக் கேள்வி கேட்டு நிறுத்தியது. நான் திரு திருவென விழித்தேன். வண்ண ஓவியம் கலீரேனச் சிரித்து விட்டு இங்குள்ள ஒவ்வொரு ஓவியமும் ஒவ்வோர் இரகசியத்தைக் கொண்டது. பாரத நாட்டில் இருந்து வரவழைக்கப்பட்ட சிற்பிகளும், அவர்கள் கூட்டாளிகளும் இக்கரடுமுரடான பாறைகளைச் செதுக்கி அதன் மீது வண்ண ஓவியங்களைத் தீட்டிஞர்கள். அவர்கள் வாழ்ந்த காலத்துச் சம்பவங்கள் எல்லாம் அதற்குள் மறைந்து கிடக்கின்றன. அவற்றைக் கூர்ந்து நோக்கிஞல் அறிந்து கோள்ளலாம் எனக் கூறிக் கொண்டு தொடர்ந்தது அந்த வண்ண ஓவியம். ''இந்த ஓவியங்கள் மாத்திரமன்று. இந்தச் சிகிரிக் குன்றமே அந்தரங்கமானது. பலநாடுகளிலிருந்தும் இங்கு மக்கள் வருகிருர்கள். வியர்க்க, வியர்க்க ஏறுகிருர்கள். இந்த ஓவியங்களின் இரகசியங்களை அறிவதேயில்லை. வஞ்சனை, சதித்திட்டம். போட்டி, பொருமை என்பன பண்டைய அரசர் சிலரிடம் காணப்பட்டன. அவர்களில் ஒருவன் தான் காசியப்பன், அந்தப்பயங்கரமான இதயங் கொண்ட மன்னன்தான் இந்த அழகிய ஓவியங்களைச் செதுக்குவித்தான்.

அநுராதபுரியில் இருந்து ஒழித்து வந்து காடடர்ந்து புதர் மண்டிக் கிடந்த இந்த இடத்தைத் தெரிந்தெடுத் தான். அவன் அவ்வளவு சூழ்ச்சி நிறைந்தவன் என்பது உனக்குத் தெரியவில்லையா? என அது கேள்வி கேட்டு மீண் டும் கூறத் தொட... மாடமாளிகைகளும் இரகசிய மந்திராலோசனை அறைகளும் உள்ளனவாக அம்மன்னன் இம்மலையை மாற்றி விட்டானென்றால் அவன் திறமை யைச் சொல்லவும் வேண்டுமா?

பின் தொடர்ந்து "தங்காய் நீ களைத்துவிட்டாய் அதோ பார்! சிகிரி என்ற பெயர் வந்ததன் அர்த்தம் புரி ந்துவிடும். அங்கு சிங்கத்தின் பெரியகால்கள் இரண்டு நீட்டிக் கொண்டிருப்பது தெரியவில்லையா? இதன் காரண மாகத்தான் 'சிங்ககிரி' என்ற பெயர் வந்தது. நீங்களெல் லோரும் அதைச் 'சீயகிரி' என்று சுருக்கி விட்டீர்களே' என்றது வண்ண ஓவியம்.

சிகிரிக்குன்றத்தை ஏறிப்பார்க்க முடியாது திரும்பிச் செல்பவர்களுக்கும் பார்வையிட வராமல் இருப்பவர்களுக் கும் சிகிரியின் வரலாற்றை அறிவிக்கின்றேன் என்று கூறி யது அவ்வண்ண ஓவியம். நானும் அதனிடம் விடைபெற் றுக் கொண்டு புறப்படுவதற்கு ஆயத்தமானேன். மேலே ஏறிச் சென்றவர்களும் திரும்பி வந்தார்கள்.

சிகிரியைப் பற்றி ஒன்றும் தெரியாத எனக்குச் சிகிரி யின் அந்தரங்கத்தை அறியச்செய்த அந்தவண்ண ஓவி யத்தை மறக்க முடியுமா? அது செய்த நன்றிக்கு நானும் நன்றி செய்யவேண்டுமென்பதற்காகவும், "நன்றி மறப்பது நன்றன்று" என்ற முதுமொழிக்கு இணங்கவும், வண்ண ஓவியத்துக்குக் கூறிய விடையைக் காப்பாற்றுவதற்காகவும், சிகிரியை எல்லோரும் சென்று பார்வையிடவேண்டு மென்று, சகமாணவ மாணவியரைக் கேட்டுக்கொள்கிறேன்

## பெண்கள்

## தமிழ் நாட்டின் கண்கள்

கருணாதேவி பொன்னுத்துரை 11. வர்த்தகம்

தமிழ் நாட்டின் முன்னேற்றத்துக்கும் தமிழ்ப்பண்பாட்டின் உயர்ச்சிக்கும் நம்நாட்டுப் பெண்களின் வாழ்வும் பணியும் பிரதான காரணங்களாயுள்ளன. ஒவ்வொருநாட்டிலும் பெண்கள் நாட்டின் முன்னேற்றத்துக்குத் தொண்டு புரிந்து தம் வாழ்வை நாட்டின் நல்வாழ்விற்காக அர்ப்பணம் செய்திருக்கின்றனர்; செய்தும் வருகிறார்கள். உலக வரலாற்று ஏட்டை எப்பக்கம் புரட்டினாலும் அங்கெல்லாம் மாதர்கள் தேசசேவையும் தியாக வாழ்வும் தெளிவாகக் காணப்படுகின்றன. ஒரு நாட்டின் முன்னேற்றம் ஆண்களில்மட்டுமே தங்கியிருக்கவில்லை. பெண்களின் பண்பாடும் அவர்களின் தீவிர சேவைகளும் கூட நாட்டின்வளர்ச்சிக்கு அவசியமானவையாம். தமிழ்நாட்டு மாதர்களை நாம் கற்பின் நிலைக்களனாகக் கொள்ளலாம். பழந்தமிழ் இலக்கியங்களில் கண்ணகி மாதவி ,மண்டோதரி. சீதை போன்றவர்கள் 'ஹொலிவூட்டின் ' கடைச்சரக்கு நாகரிகம் பெருகி வரும்இன்றும் வாழ்க்கைச் சீலத்திற்கு நினைவுச் சின்னங்களாக அமைத்துள்ளனர் பழந்தமிழ் இலக்கியத்தில் பெண்களைத் தமிழ்நாட்டின்கண்களாக ஒப்பிட்டுள்ளனர்.

வள்ளுவர் பாரதியார், பாரதிதாசன் போன்ற பெருங் கவிஞர்கள் பெண்களின் பெருமையைப் போற்றியிருப்பது பெருமைப்படக்கூடியதாகும், பெண்மையைப் பற்றிக் கூறிய பாரதிதாசன்

'மனிதர் நலமெல்லாம்
பெண்மையினால்
உண்டென்று பேசவந்த பெண்ணழகே'

எனப் போற்றியுள்ளார்கள். இவை மட்டுமா? இல்லை. பண்டைத்தமிழர் பண்பாட்டிற்கு முதுகெலும்பாக இருந்தோர் அன்றைய தமிழ்ப் பெண்களாவர். அவர்கள் ஆண்களுடன் தோளோடு தோள்நின்று தம்நாட்டிற்குச் சேவைசெய்துள்ளனர். பெண்களை வீட்டிற்குள் பூட்டி வைக்கும் வழக்கமும் பெண்கள் பேயென்ற கொள்கையும் பண்டைத் தமிழ்நாட்டில் நிலவியதில்லை என்பதற்கு அன்றைய தமிழ் நூல்களே சான்று பயக்கின்றன. நம் பண்டையர் தாம் போற்றிய பொருளுக் கெல்லாம் பெண்களின் பெயரிட்டே அழைத்தனர். பெண்களும் தங்கள் பெருமை சரித்திரத்திலே இடம்பெறக் கூடிய அளவில் தங்கள் வாழ்க்கையை நடாத்தினர். கல்வியிலும், அறிவிலும் ஆன்களுக்குச் சமமாக நின்றனர் என்பதற்கு ஔவையாரும், திலகவதியாரும், சிறந்த உதாரணமாவார்கள். அவர்கள் அச்சம், மடம், நாணம் பயிர்ப்பு, முதலியன யாவும் நிறைந்த கற்புக்கரசிகளாய் துலங்கினர். ஆன்களின் வீரத்துடன் போட்டியிட்டு நின்றது பெண்களின் வீரம். மகன் முதுகில் காயம் பட்டு மாண்டான் என்று அறிந்து வஞ்சினங்கூறி, பின்பு மார்பில் பட்டுத்தான் மடிந்தான் என்று அறிந்து, ஈன்ற பொழுதில் பெரிதுவந்த வீரத்தாயை புறநானூற்றில் காண்கிறோம். பெண்களின் வீரத்திற்கே மணிமகுடமாய் என்றும் விளங்குகிறார் சிலம்பின் செல்வி கண்ணகி.

''கடவுள் படைத்திருப்பவற்றுள் பெண்ணைவிட உயர்ந்த சிருஷ்டி வேறெதுவுமில்லை. இச்சையைத் தணித்துக் கொள்ளும் கருவியாகப் பெண்களைக் கருதினால் நாம் மிருகத்தைவிடக் கீழான நிலைக்கு வந்து விடுவோம். இதற்குப் பதிலாக ''மனித சமுதாயம் அழிந்தே ஒழிந்துபோனாலும் பாதகமில்லை.'' என்று மகான் காந்தி பெண்மையின் உயர்வைப் போற்றி உள்ளார். பெண்கள் மனம்வைத்தால் முடியாக்காரியம் ஒன்றுமில்லை. இதற்காகவே நம் நாட்டில் பெண்களைச் ''சக்தி'' எனப் பெயரிட்டு வணங்குகின்றார்கள் பழந்தமிழர் வாழ்வில் பெண்கள் நாட்டிற்கு நற்பணிகள் சேவைகள் செய்து நாட்டின் பண்பு, பெருமை இவைகளை

நிலைநாட்டியுள்ளனர். இவர்கள் பரம்பரையில் வந்த தற்கால பெண்மணிகள் சமூக முன்னேற்றச் சேவையில் ஈடுபடத் தயங்குகிறார்கள். ஆனால் மேல் நாடுகளில் பெண்கள் ஆண்க ளோடு ஒத்தாசையாகச் சகல பொதுப்பணிகளிலும் சிறந்த சேவைகள் புரிகின்றனர். நம் நாட்டில் ஏதோ போதாத காலம், சமூகக் கட்டுப்பாடு, பெண்களின் வெட்கம், ஆண் களின், கணவனின் அடக்கியாளும் அதிகார எண்ணம் எல் லாம் ஒன்று சேர்ந்து பெண்களின் சக்தியைக் குறைத்து விட்டன. நம் நாட்டில் நலன் பெறு மாதர் சங்கங்களைக் காணுவது அருமையாகவே இருக்கிறது. ஒரு சில குறிப்பி ட்ட இடங்களிலே தான் காணப்படுகின்றன மாதர்கள் பொதுப் பணிகளில் தலை காட்டினால் ஆண்கள் அவர்களை எள்ளி நகைப்பதும் தூற்றுவதும், அவர்களுக்கெதிராக போட்டியாக அவர்களின் முன்னேற்றத்தைக் கெடுப்பது மாக இருக்கிறார்கள். இந்தநிலையில் பெண்கள் பழம்பெரு மைகளை நிலைநாட்டுவதுதான் எங்ஙனம்? பண்டைத்தமிழர் வாழ்வு, பண்பு, இவைகளைப் பெண்களே தங்கள் பண்பா ட்டில் இருந்து வழுவாமல் நிலைநாட்டமுயலவேண்டும்.

ஆகவே பெண்கள் எப்போதும்அடுப்பூதும்கைப் பொம்மை களாக மட்டும் இருக்காமல் இனிமேலும் தங்கள் சக்தியை வீணாக்காமல் சமூக, தேசநலத்திற்கு சேவைகள் செய்யத் தயங்காமல் முன்வர வேண்டும். மனையற வாழ்வின் குடும்ப விளக்காக விளங்கும் பெண்கள், பொதுச் சேவைகளில் ஈடு படுவதினால் குடும்பலட்சுமி ஸ்தானத்தை இழந்துவிட நேரி டாது. பெண்களின் முன்னேற்றத்திற்கு ஆண்களும் ஒத்தா சை புரிதல் அவசியமாகும். பெண்ணினதும் பொதுவாகச் சமுதாயத்தினதும் நலனை பெண்மணிகள் உயிரினும் இனி மையாகக் கருத வேண்டும். நல்லறிஞர் நூல்களைப் படிப் பதன் மூலமும், தன்மானத்தையும், சுயசிந்தனையையும், தட் டியெழுப்பும் ஏடுகளைப் படிப்பதன் மூலமும், மாதர் முன்னே ற்றச் சங்கங்களிலும் மற்றும் கலை, பண்பாடு, கலாச்சார ஸ்தாபனங்களிலும் தயங்காது கலந்து தொண்டாற்றுவ தின் மூலமும் பெண்ணினம் தனது பெருமையை நிலைநா ட்டத் தனது கடமைகளைப் புரிய முன்வர வேண்டும்.

# தாவரங்கள்

கு மனோகரன் 12. விஞ்ஞானம்

இயற்கையின் எழில் மிகு படைப்பாம் பூமியிலே எண்ணற்ற விலங்கினங்கள் தாவரங்கள் தோன்றியுள்ளன. தாவரங்களை நோக்கும் பொழுது நாம் வளமுள்ள இடம் பசுமையான பகுதி என்றெல்லாம் கூறுகின்றோமே இவை எதை எதைக் குறிக்கின்றன? தாவரங்கள் செழித்து வளரும் பகுதியினையே வளமுள்ள பகுதி, பசுமையான இடம் என்று கூறுகிறோம். எனவே பசுமை, வளமுள்ள என்ற வார்த்தைகளுக்கே அடிப்படையானது தாவரங்களேயாகும். இத்தாவரங்கள் தமக்கு வேண்டிய உணவுப் பொருட்களை சூரிய ஒளியிலிருந்து சக்தியைப் பெற்று தம்மிடத்தேயுள்ள பச்சையத்தினுதவியுடன் காபனீர் ஒட்சைட்டு வையும் நீரையும் பெற்று உணவுப் பொருட்களாகத் தொகுக்கின்றன இச்செயல் முறை ஒளித்தொகுப்பு என அழைக்கப்படுகிறது. இதன் போது சர்க்கரைப் பொருள் தொகுக்கப்படுகின்றது. இவை மேலதிக உணவை வெல்லப் பொருளாக அல்லது மாப்பொருளாக அல்லது நொதியங்களின் உதவி கொண்டு கொழுப்பு உணவாக அல்லது சில நைதரசன் சேர்வைகளுடன் சேர்த்து புரத உணவுகளாக சேர்த்து வைக்கின்றன. எனவே இங்கு நாம் அறிந்த எல்லா உணவுப் பொருட்களையும் தாவரங்களே தொகுக்கின்றன.

எந்த ஒரு விலங்கும் இம்மூலப் பொருட்களைக் கொண்டு உணவுகளைத் தொகுக்கும் என்பது அறிந்தளவில் இல்லை எமக்குத் தேவையான எல்லா உணவுகளையும் நாம் நேரடியாகவும் மறைமுகமாகவும் தாவரங்களிலிருந்தே பெறுகின்றோம். எமக்குத்தேவையான சக்தி தாவரங்களிடமிருந்தே எமக்குக் கிடைக்கின்றது, நாம் நிறைந்த உயிர்சத்துகள் கொண்ட பால் இறைச்சி முட்டை என்பவற்றை உண்ணுகின்றோம். இவைகள் தாவரத்தையுண்கின்ற ஆடு, மாடு கோழி போன்றவற்றிலிருந்தே எமக்குக் கிடைக்கின்றன.

எனவே உணவுகள் எமக்குத் தாவரங்களிலிருந்தே கடத்தப் பட்டுக்கிடைக்கின்றது உதாரணமாக கடலில்வாழும் தயற்றங்களை (தாவரங்கள்) சிறிய கொபே பொட்டுகள் உண்கின்றன. இக் கொபே பொட்டுகளை மொலாக்காப் பிராணிகள் புழுக்க்ள் உண்கின்றன. இப்புளுக்களை சிறிய மீன்களுண்கின்றன. இச்சிறிய மீன்களைப் பெரியமீன்கள் உண்கின்றன எனவே நாம் உண்ணும் பெரிய மீன்களிலுள்ள உணவு கடற்தாவரங்களான பிளாந்தன்கள் தயற்றங்களிலிருந்தே எமக்குக் கிடைக்கின்றது. முலையூட்டிகளிலே பெரிய திமிங்கிலங்கள் கூட பிளாந்தன்களைத் தமது உணவாக்குகின்றன. எமது சுகாதாரவாழ்க்கைக்கு இன்றியமையாத உயிர்ச் சத்துக்கள் கூட கடற்தாவரங்களினுல் உற்பத்தியாக்கப்பட்டு அவை உணவுச் சங்கிலிகள் மூலம் கடத்தப்பட்டு மீனெண்ணை போன்ற உணவுகளின் உருவில் எமக்குக்கிடைக்கின்றன. எனவே தாவரங்கள் எல்லாம் ஒருவேளை அழிந்துபோகில் விலங்குகளுக்கு உணவின்றி ஆபத்து ஏற்படலாம். இவற்றையுணர்ந்து நாம் அவற்றுக்கு முதன் மதிப்பளித்து அவற்றைப் பேணி பாதுகாக்க விரைவோமாக.

விலங்குகள் சக்தியைப் பெற சுவாசத்தை மேற் கொள்கின்றன. இதன்போது விலங்குகள் வளிமண்டலத்திலிருந்து $O_2$வை (ஒட்சிசன்)பெற்று$C^2$(காபனீரெட்சைட்டு)வைவெளிவிடுகின்றன. இந்நிலைமை நீடிக்குமானுல் வளிமண்டலத்தில் $O^2$ குறைவு ஏற்பட்டு $CO^2$ செறிவு அதிகரிக்கும் இவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் தாவரங்கள் ஒளித்தொகுப்பின் போது $CO^2$ வை பெற்று $O2$ வெளிவிடுகின்றன. இதனுல் $O^2$ குறைவு ஏற்படுவதுதடுக்கப்பட்டு வளிமண்டலத்தின் சமநிலை நிலை நிறுத்தப்படுகின்றது விலங்குகளுக்கு $O2$ இல்லாதநிலை ஏற்படும் உயிராபத்தை இவைதவிர்க்கின்றன. இந்நிலையில் தாவரங்களின் முக்கியத்துவம் நன்ருக தெரிகின்றது தாவரங்கள்இன்றி விலங்குகள்ஒருநிமிடம் கூட வாழமுடியாத நிலைஏற்படுகின்றது.

ஒளித்தொகுப்பு நடத்தமாட்டாத தாவரங்கள் கூட முக்கியத்துவம் வாய்ந்தவை; இதில் சக்கரோமைசு (மதுவம்) என்னும் தாவரம் நொதியங்கள் கொண்டு குளுக்கோசிலிருந்து அற்ககோல்களை யுண்டாக்கின்றன இவ் அற்கால்கள் எமக்கு அத்தியாவசியமானவை. பாணை மெதுமையாக்க கூட மதுவங்கள் உபயோகிக்கப்படுகின்றன. எமக்குதேவையான விற்றமின் B போன்றவையும் இரசாயன பொருட்களான கிளிசரின், அசற்றேல், அல்டிகைட் போண்றவையும் மதுவத்திலிருந்து பெறப்படுகின்றது. இப்போது நியூமோனியா, தொண்டைக்கரப்பன் தோல்நோய், கண்நோய் போன்ற பெரும்பான்மையான நோய்களை எதிர்க்கும் தன்மையுள்ள நுண்ணுயிர்கொல்லியான பென்சிலின்கூட "பெணிசிலியம் நேட்டாட்டும்" போன்றதாவர பங்காக்களிலிருந்தே கிடைக்கின்றது. வருடா வருடம் உலகெங்கிலும் பல தொன்கணக்கில் பென்சிலின் உற்பத்தியாக்கப்பட வேண்டியுள்ளது. மலேரியா நோய்க்குப் பயன்படுத்தப்படும் "குயினைன்" கூட சிங்கோனுதாவரத்திலிருந்தே பெறப்படுகின்றது. எனவே எமக்கு தோன்றும் நோய்களை கட்டுப்படுத்துவதில்கூட தாவரங்கள் இன்றியமையாதவை. விஞகிரி வெண்ணெய், பாற்கட்டி ஊறுகாய் முதலியன தயார்செய்தலிலும் தென்னை, பட்டுச்சணல் என்பவற்றிலிருந்து நார்பிரிப்பதிலும் பலவகை பற்றீரியங்கள் பயன் படுத்தப்படுகின்றன. நோய்தடைப்பால் குத்துவதற்கும் வலுவிழந்த பற்றீரியங்களே பயன் படுகின்றன.

மண்ணில் உள்ள விலங்குகளின் கழிவுகள், இறந்த மடல்கள் போன்றவற்றில் சேதன $N^2$ (நைதரசன்) சேர்வைகளுண்டு. இவைபற்றீரியாக்களினுல் தாக்கப்பட்டு வரும் $N_2$ அயன்கள் பிரிகை அடைந்து $N^2$ வாயுக்களாக வளிமண்டலத்தை அடைகின்றன. இதே போன்று வளிமண்டல காபனை பச்சைத்தாவரங்கள் உணவாக மாற்றஇவை விலங்களை அடைந்துபின்னர் பற்றீரியாக்களினுல் முன்னர் போன்று சிதைக்கப் பட்டு $CO^2$ பெறப்படுகின்றது இவ்வாறு

வளிமண்டலத்தில், காபன். நைதரசனை நிலைநாட்டுவதி லும் பற்றீரியாக்கள் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும்

தயற்றங்களின் கலச்சுவர்கள் அதிகவெப்பத்தைத் தாங் கவும் ஆயணங்களை மினுக்கவும் பயன்படும். உயிர்சுவட்டு தயற்றங்களில் இருந்து எண்ணை, பெற்றேல் போன்ற எரி பொருட்கள் எடுக்கப்படுகின்றன. இவ்வாறு எந்த உயிரின் தேவைக்கும் தாவரங்கள் இன்றி யமையாதன. எனவே தாவரங்களினுல் தான் உலகம் இன்னும் உயிருடன் விள ங்குகின்றது எனலாம்.

எமது அன்ருட வாழ்க்கையைப் பாருங்கள். காலை எழு ந்தவுடன் பல்துலக்க பற்பசையை நாடுகின்ரேம். இப்பசை செய்வதற்குரிய மூலப் பொருட்களில் தயற்றமும் ஒன்ருகும் பின்னர் தேநீர் அருந்துகின்ரேம் இதற்குரிய தேயிலையும் சீனி யும் தாவரத்திலிருந்தே பெறப்பட்டன. காலைஉணவு கூட தாவரக்திலிருந்து பெறப்பட்டுச் சமைக்கப்பட்டவை உடைஅணிகின்ரேம் அதுகூட பருத்தித் தாவரத்திலிருந்து பெறப்பட்டதே, படிக்கும் புத்தகங்கள் கூடதாவர மூலப் பொருளிலிருந்தே பெறப்பட்டன. பாடசாலை நோக்கி துவிச்சக்கர வண்டியில் செல்கின்ரேமே அதன்சக்கரங்கள் கூட தாவரத்திலிருந்து பெறப்பட்ட இறப்பர்களினுலானது நாம் பாவிக்கும் கதிரை மேசை, போன்றவை கூடதாவர உறுப்புகள். இரவுவந்ததும் தயற்றங்களின் உயிர்சுவட்டிலி ருந்து பெறப்பட்ட எரிபொருள் கொண்டு விளக்கேற்று கின்ரேம். பின்னர் தாவர நூலினுல் செய்யப்பட்ட பஞ்சு மெத்தையில் துயில் கொள்ளுகின்ரேம். இதிலிருந்து எமது வாழ்க்கையில் தாவரத்தின் பங்கு எத்தகையது என்பதை அறியக்கூடிய தாயுள்ளது. எனவே இறைவனின் படைப் பில் சிறந்ததும், அற்புதமானதும் அதிகபயனைக் கொடுப் பதும் உண்மையிலேயே தாவரங்கள்தானென்று கூறலாம்.

இவற்றைவிட உயர்தாவரங்களில் நடக்கும் ஆவியுயி ர்ப்பு என்னும் செய்முறைமூலம் நீர் தாவரங்களிலிருந்து ஆவியாக வளிமண்டலத்தை அடைகின்றது. இந்த ஆவி குளிர்ச்சி அடைவதன் மூலம் மீண்டும் மழையாகதரையை அடையலாம். எனவே மழையைப் பொழியச்செய்யும் ஒரு

கருவியாகக் கூடதாவரங்கள் விளங்குகின்றன. ஆனால் இன்றையநிலையில் விலங்குகளின் தொகையானது பெருக்கல்வீதத்தில் அதிகரித்துச் செல்லும் வேளையில் தாவரங்களின் அளவானது மிகக்குறைந்தனவாலேயே கூடிக்கொண்டு செல்கின்றது இவ்வாறு விலங்கினங்களுக்குதாவரங்களுக்குமிடையேயுள்ள வெளி கூடிக் கொண்டே போகுமானால் எதிர்காலத்தில் இயற்கையின் சமநிலை நீக்கப்பட்டு ஒருகுமுறல் ஏற்படுத்தப்படலாம் என்பதை உணரக் கூடியதாயுள்ளது இப் பெரும் சவாலினை எதிர் கொள்வதற்கு மனிதன் நவீன விஞ்ஞான தொழில் நுட்பஅறிவைப் பயன் படுத்தி தாவர உற்பத்திப் பெருக்கத்துக்கு வேண்டிய பசுமைப் புரட்சியை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. இன்று குடித்தொகை அதிகரிப்பு இலங்கையைப் பொறுத்தளவில் பிரச்சனையாகி வருகின்றது: எனவே இக்குமுறலை எதிர் நோக்கும் முதல்நாடாக இலங்கை கூட அமையலாம். இருந்தும் எமது அரசாங்கத்தின் ஒருசில திட்டங்களும் முயற்சிகளும் வெற்றியடையுமானால் எம்நாட்டில் ஓர்திடநிலை தொடர்ந்து உருவாகலாம். எமது மக்களின் பசித்துயர் துடைக்க விஞ்ஞானிகள் அல்லும் பகலும்அயராதுழைத்துச் சிறந்த விளைவுகளைத்தரக் கூடிய அதிசய இனங்களை உண்டாக்கியுள்ளார்கள். சாதாரண விவசாயிகள் கூடவிஞ்ஞான அறிவுடன் இணைந்து செயலாற்றினால் இவ்வதிசய இனங்கள் அற்புத விளைவைக் கொடுக்கும் என்பதுதிண்ணம்.

எனவே எமது நாட்டில் ஏற்படக்கூடிய இயற்கைக் குமுறலைத் தடுக்கவும் மக்களின் பசிப்பிணியைத் தீர்க்கவும் எம்மிடையே ஓர் திடநிலையை உண்டாக்கவும், புதிய புதிய தானியவகைகளை, தாவரங்களை விஞ்ஞான முறை கொண்டு உருவாக்கவும் அழிவைநாடிச் செல்லும் தாவரங்களைக் காப்பாற்றவும் இப்போதிருந்தே நாம் முயற்சி எடுத்தல் வேண்டும் அப்போதுதான் நாம் எம்மிடையே சுபீட்சத்தை ஏற்படுத்தலாம்.

## புதிய கல்வித் திட்டத்தில்

# தொழில் முன்னிலைப் பாடநெறி

உயர் திரு. J S. அரியரத்தினம் B.Sc Dip-in-Ed

(அரியாலை இளைஞர் இந்து மாமன்றத்தின் முதலாவது பரிசளிப்பு விழாவின் போது எமது அதிபர் ஆற்றிய உரை.)

பெரியோர்களே, மாணவர்களே, பெற்றோர்களே, உங்கள் அனைவர்க்கும் முதற்கண் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் கழகத்தின் முதற் பரிசளிப்பு விழாவிற்கு என்னையும் எனது பாரியாரையும் பிரதம விருந்தினர்களாக அழைத்தமை உண்மையில் எமக்களித்த கௌரவமேயாகும்.

இது போன்ற மேன்மை வாய்ந்த இயக்கங்களுடன் தொடர்பு கொள்ளுதலும் அதன் வளர்ச்சியைக் காண்பதும் பெரும் பேறெனவே கருதுகின்றேன். கல்வியறிவுள்ள இளைஞர்களும் பெண்களும் மிக உன்னதமான பணியில் ஈடுபட்டிருப்பது கண்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன் இந்தக் கிராமத்துச் சிறார்கள் வாய்ப்பு வசதியற்றுத் தமது கல்வித் துறையை மென்மேலும் வளர்ப்பதற்குச் சந்தர்ப்பம் இல்லாது தவிக்கின்ற அதே வேளையில் அதி உன்னதமான உங்கள் தொண்டு அவர்களுக்குப் பெரும் பேறாகவே அமையும்:

"அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்பது பாரதியின் வாக்கு. எனவே இலவசமாக மாணவர்கட்கு கல்வி புகட்டும் உங்கள் பணி சமூக சேவைகளுள் மிக உயர்ந்த தொன்றாகும். இளைஞர்களினதும் மாதர்களினதும் இவ்வரிய தன்னலமற்ற பணிகண்டு யான் உண்மையில் பெருமையும் பூரிப்பும் அடைகின்றேன்

கல்வித்துறையில் பின் தங்கியவர்க்கு உறுதுணை புரிந்து அவர்களது வளர்ச்சிக்கு ஊக்கம் அளிப்பது மிக மேன்மை வாய்ந்த தொண்டாகவும், தொண்டுகள் யாவற்றிலும் சிகரமாகவும் கருதுகின்றேன்.

பாடசாலையில் பயிலும் அறிவுக்கு மேலும் ஊக்கமளிப்பதாகவும் அமையும் உங்கள் நற்பணியையும் நல்ல கருத்துக்களையும் வரவேற்கும் அதே வேளையில் பாடசாலைகளில் நிகழும் கல்வி முறை மாற்றங்களையும் கருத்தில் இருத்த வேண்டுகிறேன் கடந்தகாலக் கல்வி, பரீட்சையை அடிப்படையாகவும், முற்றிலும் ஏட்டுக்கல்வியை அடிப்படையாகவும், கொண்டதாகவே அமைந்தது மாணவர்தம் வயதிற்கும் உளச் சார்புக்கும் ஒவ்வாத கல்வியினையே கடந்தகாலங்களிற் கற்றோர்கள் அன்றைய மாணவர்கள் உடை நலுங்கா உத்தியோகம் பெறுதல் பல்கலைக் கழகத்திற்குப் பிரவேசித்தல் என்பவற்றிலேயே நாட்

டம் காட்டினர். இம்முறையான கல்வி காலனி ஆட்சிக் காலத்துக்கு உகந்ததாகவே இருந்தது. ஆயின் அக்கல்விமுறையால் ஏற்படப் போகும் தீமைகளை எதிர்பாராது, அக்கல்விமுறையால் நிகழப்போகும் தாக்கங்களைச் சிந்திக்காது நாடு சுதந்திரம் பெற்ற பின்பும் அப்படியே அம்முறையினைப் பின்பற்றி வந்தனர்.

இன்று, நமது நாடு சுதந்திர நாடு. இங்குள்ள ஒவ்வொருவருக்கும் இந்நாட்டின் வளர்ச்சியில் பங்குண்டு. கடந்தகாலங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டு வந்த பாடவிதானங்கள் இனிமேலும் எமது நாட்டின்தேவைக்கு— சுபீட்சத்திற்கு ஒவ்வாததாகும். மகத்தானமனித சத்தியைக் கொண்டு சுயதேவைகள் பலவற்றைப் பூர்த்தி செய்து தன்னிறைவு காண வேண்டிய நிலையில்நாம் இருக்கின்றோம். எங்கள் நாட்டு வளங்களைக் கொண்டு எமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஓரிய முயற்சிகளில் ஈடுபடவேண்டியவர்களாக இருக்கின்றோம். பிற நாட்டை எதிர்பாராது எமது வாழ்வை நாமேவளப்படுத்திக்கொள்ள வேண்டும். எமது நாட்டு வளங்கள் பிறநாட்டார் கைப்பட்டு அவர்களுக்கு இலாபம் தேடிக் கொடுத்த காலம் மலையேறிப்போக நாமே நமக்குநல்லவர்களாக எமது ஆற்றலைப் பயன் படுத்தி வாழ்வை வளப்படுத்த வேண்டும். கடந்த காலங்களில் ஆட்சி செய்த அந்நியர் நாட்டின் வளத்தைக் கொண்டு அளவுக்கு மீறிய இலாபத்தைப் பெறுவதும் மக்களிடம் உழைப்பை உறிஞ்சுவதுமே குறிக் கோளாக இருந்தனர்.

இன்று நாமே நம்மை ஆள்கின்றோம்; எங்கள் முயற்சியிலேயே நாட்டின் சகல நலன்களும் தங்கியிருக்கின்றன; எனவே விரைவும், விவேகமும் அடிமை மனப்பான்மை ஒழிந்து சுதேசப்பற்று உதித்தலுமே நாட்டின் சுபீட்ச ஒளியெனலாம்.

மேலே கூறிய நோக்கத்தைக் கருத்திற் கொண்டே நமது நாட்டின் கல்விமுறையும் மிக வேகமாக மாறிக் கொண்டு போகின்றது. ஒருமுகப் படுத்தப்பட்ட சீரான பாடவிதானத்திட்டம் நாட்டின் எல்லாப்பாகங்களிலும் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு மாணவனுக்கும் சமசந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது அன்றியும் மாணவன் தனது ஆற்றலையும் உளச்சார்பையும் உன்னத நிலைக்கு உயர்த்தவாய்ப்பாகின்றது. முடிவாக மாணவனின் பூரணவளர்ச்சிக்கு உகந்த முறையில் பாடத்திட்டம் அமைந்துள்ளது.

முதன்மொழி, சமயம், கணிதம், பொதுவிஞ்ஞானம், இரண்டாவது மொழி, சமூகக் கல்வி, உடல்நலக்கல்வி, கவின் கலைகள் ஆகிய பாடங்கள் மாணவனைப் பூரணப்படுத்துகின்றதெனலாம் தனது உளச் சார்புக்கு ஏற்ற வண்ணம் பாடங்களைத் தேர்ந் தெடுக்கவும், ஆற்றலை மென்மேலும் வளர்க்கவும் சந்தர்ப்பம் கொடுக்கப்படுகின்றது. இவற்றைப் படிப்பதனால் நாட்டினது தேவைகளை, வளரும் சமுதாயத்தினது தேவைகளை மாணவன் அறியக் கூடியதாகின்றது;

மேற்கூறிய பாடங்களோடு இயற்கை வளம், கேத்திரகணித பொறிமுறை வரைதல், தொழில் முன்னிலைப் பாடங்கள் என்பனவும் போதிக்கப்படுகின்றன. இவை பாடவிதானத்திற் சேர்க்கப்பட்டமையால் மாணவன்மேலும் அறியாதிருக்கும் இயற்கை வளங்களைக் கண்டு கொள்ளவும், அவற்றை மேலும் வளப்படுத்தவும் முடிகின்றது.

தொழில் முன்னிலைப் பாடங்களை பாடவிதானத்துட் சேர்த்தமை மிகவும் வரவேற்கத் தக்க தொன்றாகும். காந்தியடிகளே வர்த்தா கல்வி முறையினை இதே அடிப்படையிலேயே புகட்டமுன்வந்தார். மாணவன் தனது சூழலுக்கேற்ப தனது திறமைகளை விருத்தி செய்து மேலான நன்மையை நாட்டிற்கும், தனக்கும் ஏற்படுத்தக் கூடிய வகையிலும், நாட்டின் நற்பிரசையாக விளங்கக் கூடிய முறையிலும் அமைகின்றது. அன்றியும் அவ்வத் தொழில்முறைகளில் ஈடுபாடு கொண்டு உழைப்பதனால், அவ்வத் தொழில் முறைகளிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து மென்மேலும் தொழில்வளம் பெருக்க முடியும் என்பதில் ஐயமில்லை. தொழில்வல்லுனர்களுடன் போதனையின் போது நேரடித் தொடர்பு கொள்ளும் போது அவனதுதிறமையும், முக்கியத்துவத்தையும் மாணவன் உணருகின்றான். இதனால் தனது எண்ணப் போக்கில் மாற்றம் ஏற்படவும் தொழிற்திறனில் நாட்டமும் பெறமுடியும் தொழில் மகத்துவத்தை இயல்பாகவே உணர்ந்து மதித்து நடக்கக்கூடிய தொரு சூழ்நிலையை அடைவான் இதனால் உடைநலுங்கா அற்ப உத்தியோகங்களுக்கு அடிமையாகி விடமாட்டான் சமுதாயத்திற்கும் தனக்கும் ஏற்றநற்பணியினைச் செய்தவனாவான்.

எனவே நவீன கல்வித்திட்டத்தின் சுருக்கமானதொரு விளக்கத்தையே யான் மேலே குறிப்பிட்டுள்ளேன். இவற்றை யான் கூறுவதன் முக்கிய நோக்கம்; பெற்றோரும் ஆசிரியர்களும், பாடசாலைகளில் எவ்வெவற்றைக் கற்பிக்கின்றார்கள்? புதிய கல்வித் திட்டத்தின் குறிக்கோள் என்ன? என்பவற்றை அறிந்து கொள்ளல் சிறந்ததென்பதனாலேயேயாம். தமது பிள்ளைகளின் கல்வியில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றிய விளக்கம் பல பெற்றோர்க்குத் தெரியாது. இந்த மாற்றங்களைப் பற்றிய விளக்கம் ஒவ்வொரு பெற்றோருக்கும் தேவையானது என்பதனைக் கருத்திற் கொண்டே இவ்விளக்கத்தை இங்கு கூற முனைந்தேன். இச்சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்த கழகத்தார்க்கு எனது நன்றியறிதலைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

கழகத்தாரது அரும்பணி பற்றியும் இந்நிலையில் சில வார்த்தைகள் கூறவிரும்புகின்றேன். சேவையே நாட்டுக்குத் தேவை என்பதை உணர்ந்து கல்லூரிகளிற் பெறும் அறிவோடு மேலதிகமாக மாணவர்க்கு உதவும் பெரும்பணியைச் செய்கின்றீர்கள். இது ஓர்

உன்னதமான பணி என்பதை கூறவிரும்புகிறேன்: நவீன கல்வித் திட்டத்துக்கு உகந்த வகையில் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி மாணவர்கள் பெரிதும் பயன்பெறும் வகையில், தொழிற் துறைகளில் நிபுணத்துவம் மிக்கோரை வரவழைத்து, தொழில்வளம் பெருக்கலாம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். பாடசாலையை விட்டு நீங்கி, அங்கு பயின்ற தொழிற்கல்வியோடு, மென்மேலும் தொழில்வளம் பெருக்கி நாட்டின் சேவைக்கும் தமது வாழ்வுக்கும் தம்மை ஆக்கிக்கொள்ள வாய்ப்பளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

குடிசைக் கைத்தொழில் போன்றவற்றில் செய்முறைப் பயிற்சிகள் அளிப்பதோடு, போதனு கல்வியைக் கொடுக்கும் வாய்ப்பினை ஏற்படுத்துவீர்களானல் கிராமத்து மாணவர்கள் தமது வாழ்க்கையைப் பொருள்வளம் மிக்கதாக்குவர். இம்முயற்சியும், தொண்டும் உங்கட்கு இயலாததொன்றல்ல. தொண்டு செய்வதே குறிக்கோளாகக் கொண்டியங்கும் கழகத்தார்க்கு இதுபோன்ற விடயங்களிலும் கவனமெடுத்தல் நன்றென்றே சுட்டிக் காட்டினேன். இது போன்ற கைத்தொழில் வளர்ச்சி கிராமத்தின் பொருள்வளத்துக்குப் பெரும் பணியாக அமையும்.

நாம் பழைய சந்ததியினர், நீங்களோ புதிய சந்ததியினர்: ஊக்கமும், உற்சாகமும் கொண்டுழைக்கும் ஸ்ரீ லங்காவின் நற் பிரஜைகள். எங்கள் தாய்நாடு நலம்பெற உங்கள் திறன் பயன் பட வேண்டும்.

அரியாலை வாழ் மக்கள் தங்கள் திறமையை வெளிக்கொணர்ந்து அரும்பெரும் காரியங்களைச் சாதிப்பதிலும், முன்னின்று எக்காரியத்தையும் ஆரம்பித்து தொடர்ந்து வெற்றியடையும்வரை உழைப்பதிலும் தனித்துவம் பெற்றவர்கள். இதற்குச் சான்ருக சேவையின் தலைமக்களான திருவாளர்கள் கனகரத்தினம், காசிப்பிள்ளை, C. பொன்னம்பலம், சிற்றம்பலம், அருளம்பலம் எனப் பலரைக் குறிப்பிடலாம். எனவே உங்கள் தனித்துவத் திறனை, அவர்கள் வழிநின்று உழைப்பால் உயர்ந்து, உன்னத நிலையை அடையச் செய்வீர்களாக.

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் ஏனைய நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க இடையூருக இராது. எனது சொற்பொழிவை முடித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

யானும் எனது பாரியாரும் இன்று உங்கள் மத்தியில் மிக்க மகிழ்ச்சியுடனும், நன்றியறிதலுடனும் இருக்கின்ருேம் என்பதனைக் கூறிக் கொள்வதோடு, மீண்டும் ஒருமுறை கழகத்தார்க்கு நன்றி கூறி, கழகம் நலம்பெற வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

( வணக்கம் )

# கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

## பரிசளிப்பு விழா
— 1975 —

## அதிபரின் அறிக்கை
**15—3—1975**

மாண்புமிகு கனகசபாபதி அவர்களே !
திருமதி. கனகசபாபதி அவர்களே !
சகோதர, சகோதரிகளே !

பெற்றோர், பழைய மாணவர்கள், அபிமானிகள் ஆகிய உங்களை எமது வருடாந்தப் பரிசளிப்பு வைப்வத்திற்கு வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இவ்வருடாந்தப் பரிசளிப்பு விழா வழக்கமாக மார்கழி மாதத்திலேயே நடைபெற்றிருக்க வேண்டுமாயினும் தவிர்க்க முடியாத சில காரணங்களால் இவ்வருட ஆரம்பத்தில் நடாத்தப்படுகின்றது. அதற்காக உங்களிடம் மன்னிப்புக் கோருகின்றேன்.

உயர் திரு கனகசபாபதி அவர்களே !

உங்களையும் உங்கள் பாரியாரையும் பிரதம விருந்தினராக எம்மிடை கொண்டிருப்பது உண்மையில் பெரும் பேறெனவே கருதுகின்றோம். எமது அழைப்பை ஏற்று வருகை தந்தமைக்கு உளமார்ந்த நன்றியை நவில்கின்றோம். கடந்த ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து, உங்கள் பேராசிரியர்களில் ஒருவரையே பிரதம விருந்தினராக அழைத்திருந்தோம். ஆயின் இவ்வாண்டு யாழ் வளாகத்திலிருந்து எமது விழாவைச் சிறப்பிக்கும் தலைமகன் என்ற முறையிலும் எங்கள் யாழ்ப்பாண மண்ணில் உதித்த கல்விப் பேராளன் என்ற முறையிலும் நாம் இருமடங்கு பெருமையும் பூரிப்பும் அடைகின்றோம் வடபிராந்தியத்தில் உள்ள அரசினர் மத்திய கல்லூரிகளில் பழமை வாய்ந்த எமது கல்லூரிக்கு யாழ் வளாக விஞ்ஞானத்துறைத் தலைவர் என்ற முறையிலும், கணிதப் பேராசான் என்ற அமைவிலும் இவ்வைபவத்தைச் சிறப்பிக்க நீங்களே பொருத்தமுடையவராகும். அளப்பரிய பெருமைகளையும், சிறப்புக்களையும் கல்வித்துறையில் அடைந்துள்ளீர்கள். அவற்றை ஈண்டு குறிப்பிடுவதில் மகிழ்வும் பெருமையும் அடைகிறேன். விஞ்ஞான மாணிச் சிறப்புப் பட்டத்தில் முதலாம்பிரிவிற் தேறி இலண்டன் சர்வககாசாலையில் புகழை ஈட்டினீர்கள். அத

னல். புலமைப்பரிசில் பெற்று கேம்பிறிஜ் சர்வகலாசாலைக்குச் சென்றீர்கள். அங்கு தங்களின் ஆற்றலின் மேம்பாட்டாலும், நுண் மாண் நுழை புலத்தாலும் (கலைமுதுமாணி) கலைமாச் செல்வர் பட்டத்தையும், குறுகிய காலத்தில் பெற்று ஈழமண்ணிற்குப் பெருமை தேடித் தந்தீர்கள்.

இத்துணைப் பெரும் பட்டங்களைப் பெற்று இலங்கைச் சர்வகலா சாலைக்குத் திரும்பிய தாங்கள் கணிதத்துறைக்கு அணிகலனாக விளங்கி ஆற்றிய பெரும்பணி, உங்களைச் சர்வகலாசாலை வாழ்வில் அதி உன்னத நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது. பட்டங்கள் பெற்றதோடமையாது மேற்கத்தைய சஞ்சிகைகளுக்கு வியத்தகு ஆய்வுக் கட்டுரைகளைக் கணிதத்துறையில் நல்கிப் பிறந்த நாட்டிற்குப் பெருமை தேடித்தந்துள்ளீர்கள். நாட்டின் தலைசிறந்த கணித மேதைகளை எமது வடபிரதேசம் ஈன்றிருக்கின்றது. அத்தகைய மேம்படு மேதைகளுள் நீங்களும் ஒருவராகும்.

பட்டங்களுக்கும் பதவிகளுக்கும் மேலாக தங்களுடைய எளிய, இனிய வாழ்வும், தருக்கற்ற பெருந்தன்மையும் மாணவர்களுடனும் சகபாடிகளுடனும் பழகும் பான்மையும் உங்கள் உயர் தனிப் பண்பைத் தெற்றென விளக்குவதாகும். கல்விப் பணியோடு சமூக, சமயப் பணியிலும் தாங்கள் கொண்டுள்ள ஆர்வமும், ஆற்றிய தொண்டுகளும் மேலானவையாகும். குறிஞ்சிக் குமரன் கோவிலை எழில்பெறச் செய்த பெரியோர்களில் முதன்மை வாய்ந்தவர் என்பதால் பேராதனை வளாகத் தமிழ் மாணவர்கள் என்றும் உங்கட்குக் கடப்பாடுடையவர்களாவர். எல்லாவற்றிற்கும் மேலாக யாழ் வளாக விஞ்ஞானத்துறைப் பீட மாணவர்களுக்குப் பெரும் பேறெனவே கூறுவேன். குறிப்பாக பௌதிக விஞ்ஞான மாணவர்கட்கோர் பொற்காலம் எனலாம். பிறந்த மண்ணில் உள்ள வளாகத்திற்கு உங்களது தனித்துவத்தையும் பேராற்றலையும் நல்க இறைவன் அருள்பாலிப்பானாக.

திருமதி கனகசபாபதி அவர்களே !

எமது அன்பான அழைப்பை ஏற்றுப் பரிசில்கள் வழங்குவதற்கு வந்துள்ளீர். எனவே எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். உங்கள் கரங்களால் பரிசில்களைப் பெறுவதற்கு மாணவ மாணவிகள் உண்மையிற் பெரும்பேறு பெற்றுள்ளார்கள். உங்களை ஒரு தலைசிறந்த கல்விமானின் பாரியார் என்ற முறையில் வரவேற்பதோடு அமையாது எங்கள் கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை உள்ளவரும், நண்பருமான மருத்துவக் கலாநிதி பத்மநாதன் அவர்களின் சகோதரி என்ற முறையிலும் வரவேற்று மகிழ்கிறோம். கலாநிதி பத்மநாதன் அவர்களே தங்கள் இருவரையும் இவ்விழாவில் எங்களிடையே வைத்திருக்க வித்திட்டாரெனலாம். கணிதப் பேராசானும், சமூக, சமயபணிச் சிற்பியுமான சீராளனைத் தலைவனாக ஏற்ற தாங்கள் உண்மையில் பெருமையும், பெரும்பேறும்

பெற்றவரென்றே இயம்புவேன். அன்னாரின் ஆக்கப்பணிகளின் தாக்கத்தைப் பகிர்ந்து கொள்ளத் தயங்கமாட்டார்கள் என்றே எண்ணுகின்றேன். வடக்கில் உங்கள் இருவரையும் பிரதம விருந்தினர்களாகப் பெறும் முதற்பேறு எமது கல்லூரிக்கே கிடைத்துள்ளது.

எமது மண்ணில் உதித்த உத்தமனை, பேராற்றல் பெற்றவரைக் கௌரவிக்கும் முகமாகவும், கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறையுடையோராகவும் எமது அழைப்பை ஏற்றுப் பெரும் திரளாக வருகைதந்த பெற்றோர்களே, பழைய மாணவர்களே உங்கள் அனைவர்க்கும் எமது மகிழ்ச்சியையும், நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆசிரியர்கள் 1973.

இவ்வாண்டு எமது கல்லூரியில் வந்து சேர்ந்த ஆசிரிய, ஆசிரியைகளை வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

செல்வி இராதா கந்தசாமி அவர்கள் முதலாந்தரப் பயிற்றப் பட்ட விசேட ஆங்கில ஆசிரியையாகும். ஆற்றல் வாய்ந்த, மாணவ மாணவிகளின் நன்மதிப்பைப் பெற்ற ஆசிரியையை வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

செல்வி எஸ். பி. நவரத்தினசிங்கம் அவர்கள் 1974-ம் ஆண்டின் தொடக்கத்தில் எமது கல்லூரிக்கு வந்தார். அனுபவம் உள்ள உயிரியல் ஆசிரியை. வருங்காலத்தில் மாணவர்களின் திறமைக்கும் சித்திக்கும் அன்னாரது ஆற்றலும், அனுபவமும் பெரிதும் பயன் படும் என்றே கருதுகிறேன். எமது பழைய மாணவிகளில் முதன்மை வாய்ந்த ஒருவர் என்ற முறையில் அவரை வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

திரு. த. தியாகராசா அவர்கள் 1974-ல் எமது கல்லூரிக்கு மாற்றலாகி வந்துள்ளார். புவியியல் சிறப்புப் பட்டதாரியான இவர் க. பொ. த. சாதாரண, உயர்தர வகுப்புக்களில் கற்பிக்கின்றார். கல்லூரியின் பழைய மாணவர் என்ற முறையில் நீண்டகாலம் தனது தாய்க்கல்லூரிக்குச் சேவை செய்வாரென எண்ணுகின்றேன்.

திரு எஸ். சூசைப்பிள்ளை அவர்கள் இரு வருட காலம் சென்ற். யேம்ஸ் மகா வித்தியாலயத்தில் பதில் அதிபராகக் கடமையாற்றிய பின் மீண்டும் எமது கல்லூரிக்கு வந்துள்ளார். எமது கல்லூரிக்குத் தமது பேராற்றலை ஈந்து மனப்பூர்வமான சேவை செய்யும் பாங்குடையவரைப் பெற்றது பெரும் பேறெனவே கருதுகின்றேன்.

திருமதி ஆர். சிவசுந்தரம் அவர்கள் உயிரியல் விஞ்ஞானப் பட்டதாரியாவார். பாடசாலைச் சூழலில் வதிபவரும், பழைய மாணவியுமான அன்னார் கல்லூரியின் வளர்ச்சிக்கு தனது திறமையை நல்குவாரென நம்புகிறேன்.

திரு ஏ. சிவலிங்கம் அவர்கள் நெல்லியடி ம.ம. வித்தியாலயத்திலிருந்து ஓரிரு தினங்கள் நமது கல்லூரியிற் தங்கிப் பின் யா/இந்துக் கல்லூரிக்கு மாற்றலாகிச் சென்றார்.

திரு வி. ஏ. பொன்னம்பலம் அவர்கள் 1973ம் ஆண்டின் ஆரம்பத்தில் வந்து ஆண்டின் இறுதியில் மாற்றலாகிச் சென்றார். க.பொ.த உயர் வகுப்புக்களிலும், சாதாரண வகுப்புக்களிலும் தமிழ் பொருளியல் பாடங்களைத் திருப்திகரமாகக் கற்பித்தார்; பாடசாலையின் புறகருமங்களிலும் ஆர்வம் கொண்டுழைக்கும் தன்மையுடையவராதலால் கல்லூரி நடாத்திய பொருட்காட்சியில் பங்கு கொண்டுழைத்தார்,

திரு எம். பி. புறாடி அவர்கள் சில மாதங்கள் எமது கல்லூரியிற் கற்பித்தார். பின்னர் நிரந்தரமாக வேம்படி மகளிர் கல்லூரிக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார், கல்லூரியின் புறகருமங்களிலும், கற்பித்தலிலும் தனது திறமையை எடுத்துக்காட்டியுள்ளார்

திரு எம். ஐ. ஜோக்கியம்பிள்ளை அவர்கள் 1974-ம் ஆண்டு எமது கல்லூரிக்கு வந்தார். உயர்வகுப்புகளில் உயிரியல், தாவரவியல் கற்பித்துத் தனது திறமையால் மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர், இங்கிருந்து வெளிநாடு செல்லும் நோக்குடன் இளைப்பாறியுள்ளார்.

திருமதி எல். நமசிவாயம் அவர்கள் தனது விருப்பத்திற்கிணங்க மாற்றலாகிச் சென்றுள்ளார். சேவை உளம் கொண்ட சீரிய ஆசிரியை தனது முழுத்திறனுடனும், உள மகிழ்வுடனும் நீண்ட காலம் மாணவர்க்குக் கல்வி புகட்டினார் அன்னாரைப் பிரிய எமக்கு விருப்பில்லாவிடினும் சொந்த நலனுக்காக அவர் மாற்றலாகிச் சென்றார் என்பதால் செல்விடம் சிறப்புற வாழ்த்துகிறேன்.

செல்வி எம். சிவசம்பு அவர்கள் நடன ஆசிரியையாகப் பணி புரிந்தவர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிக்குச் செல்வதற்காக எம்மை விட்டுச் சென்றுள்ளார். மிகத் திறமையான ஆசிரியை, பயிற்சி முடிந்ததும் எமது கல்லூரிக்கு வருகை தரின் மனப்பூர்வமாக வரவேற்கிறோம்.

செல்வி ராசேஸ்வரி கந்தசாமி அவர்கள் கல்வி டிப்ளோமாப் பயிற்சிக்குச் செல்லுமுன் அநுராதபுரத்துக்கு மாற்றலாகிச் சென்றார். சேவையுளத்துடன் சக ஆசிரிய, ஆசிரியைகளினதும், மாணவர்களினதும் நன்மதிப்பைப் பெற்றவர். இவர் ஆற்றல் மிக்க அனுபவமுதிர்ச்சியுள்ள ஆங்கில ஆசிரியையுமாவார்

மாணவர் நிலை

கல்லூரியில் 983 மாணவர்கள் பயில்கின்றனர் 575 ஆண்களும் 408 பெண்களும் இத்தொகையில் அடங்குவர். இவ்வருடம் 6-ம் வகுப்பிற்கு 85 மாணவர்களும் 7-ம் வகுப்பிற்கு 9 மாணவர்களும் 8-ம் வகுப்பிற்கு 80 மாணவர்களும் 9-ம் படிவத்தில் 75 மாணவர்களும் 10-ம் படிவத்தில் 9 மாணவர்களும் 11-ம் படிவத்தில் 40 மாணவர்களுமாக 300 மாணவர்களைச் சேர்த்துள்ளோம்.

எமது கல்லூரியில் ஆறு வெவ்வேறு தொழில் முன்னிலைப் பாடங்கள் 6, 7, 8, 9-ம் படிவங்களில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களாற் கற்பிக்கப்படுகின்றன. இவ்வருடம் பாடசாலையை விட்டு விலகிய பிள்ளைகளுக்கு மாலை வகுப்புகள் நான்கு வெவ்வேறு துறைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன அவையாவன: உலோக வேலை மரவேலை, நெசவு, மனையியல் என்பனவாகும். சலகூத்திரம் பழுது பார்க்கும் துறையினையும் விரைவில் அறிமுகம் செய்து வைக்க இருக்கிறோம். இத்துறைகளில் அளிக்கப்படும் பயிற்சி 6 மாதகால அளவினதாகும். மாணவர் தொகை 20ஐ அடக்கியுள்ளது. பயிற்சி முடிவில் பிறரால் தொழிலில் அமர்த்தப்படக்கூடியதாகவோ அன்றி தாமாகவோ தொழில் நடாத்தும் தகைமையைப் பெறக்கூடியதாகவோ இருக்கும். இது ஒரு பரீட்சார்த்த முயற்சியேயாகும். பின் விஸ்தரிக்கப்பட்டு பெறப்படும் அனுபவத்தின் வாயிலாக நன்மை பயப்பதாய் அமையும்

பரீட்சைப் பெறுபேறுகள்

1973-ம் ஆண்டு மார்கழியில் க. பொ. த சாதாரண பரீட்சையில் ஐந்து பாடங்களிலும் அதற்கு மேலும் 75 மாணவர்கள் சித்தியடைந்தனர் 16 மாணவர்கள் விஞ்ஞானப் பகுதிக்கும் 14 மாணவர்கள் கலைப்பிரிவிற்கும் 7 மாணவர்கள் வாத்தகப் பிரிவிற்கு மாக மொத்தம் 37 மாணவர்கள் க. பொ. த உயர்தர வகுப்பிற் குத் தகுதி பெற்றனர்.

1973-ம் ஆண்டு சித்திரையில் நடந்த க. பொ த. உயர்தர பரீட்சையில் 27 மாணவர்கள் 3 பாடங்கள் அல்லது அதற்கு மேலும் சித்தியடைந்தனர். இவர்களில் 23 மாணவர்கள் சர்வகலாசாலை நுழைவுக்குத் தகுதி பெற்றனர். அவர்களில் 6 மாணவர்கள் சர்வ கலாசாலைக்குச் சேர்க்கப்பட்டனர்

1974-ம் ஆண்டு 29 மாணவர்கள் சர்வகலாசாலை நுழைவுக்குத் தகுதி பெற்றனர். அவர்களில் 9 மாணவர்கள் சர்வகலாசாலைக்கு சேர்க்கப்பட்டனர். அவர்களில் உயிரியல் விஞ்ஞானப் பகுதிக்கு ஒரு வரும், கலைப்பிரிவுக்கு ஒருவரும்' வர்த்தகப்பிரிவுக்கு எழுவருமாம் ஒரு வர்த்தக மாணவன் கலைப்பகுதியில் அகில இலங்கையிலேயே மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். முதல் இரு இடங்களும் சிங்களமொழி மூலம் தோற்றிய மாணவர்களால் பெறப்பட்டதாகும்

கடந்த மூன்றாண்டுகளில் சர்வகலாசாலைக்குத் தகுதிபெறும் மாணவர் தொகை ஏறத்தாழ மும்மடங்காக அதிகரித்துள்ளது. 1971-ம் ஆண்டு 12 ஆக இருந்த தொகை 1974-ல் 29 ஆக அதி கரித்துள்ளது. இப்பெறுபேறு பெருமைக்குரியதொன்றாகும். இச் சந்தர்ப்பத்தில் பரீட்சைப் பெறுபேற்றையொட்டி உயர்வகுப்புகளிற் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நன்றி நவில்கின்றேன். பல அசௌ கரியங்களுக்கிடையிலும் இத்தகைய பெறுபேற்றைத் தம் அரும் பெரும் முயற்சியால் பெற்றமை மெச்சத்தக்கதொன்றாகும். வளர்ச்சி காணும் பரீட்சைப் பெறுபேறுகளில் இன்னும் துரித வளர்ச்சி காண அயராது உழைக்க ஆசிரியர் குழாம் திடசங்கற்பம் பூண்டுள்ளது

## புறகருமங்கள்

கல்லூரியினால் பிரமாண்டமான முறையில் விஞ்ஞான கைப்பணி, கலைப் பொருட்காட்சி நடாத்தப்பட்டது. மாணவர்கள் ஏட்டுக் கல்வியில் மட்டுமல்லாது செய்திறனிலும் சிறக்க வேண்டுமென்பதற்காகவும், நவீன கல்வி வளர்ச்சிக்கு ஆக்கம் அளிப்பதற்காகவும் நடாத்தப்பட்ட பொருட்காட்சிக்கு வடபிராந்தியத்தில உள்ள சகல பாடசாலைகள் நல்ல வரவேற்பளித்ததோடு அப்பெரு முயற்சியில் ஈடுபட்ட எமக்கு பெருவெற்றியென்றே கூறவேண்டும்.

## விளையாட்டுத்துறை

பாடசாலைகளுக்கிடையேயான பிராந்திய மெய்வல்லுனர் போட்டியில் ஆண்களும் பெண்களும் பங்கு கொண்டு திறமை காட்டினர். அன்றியும் தகுதிபெற்ற மெய்வல்லுனர் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையேயான போட்டியிலும் பங்குபற்றி சில இடங்களைப் பெற்று முன்னணியில் திகழ்ந்தனர்

வருடாந்த விளையாட்டுப் போட்டிக்கு திரு. திருமதி. ஆர். ஆர்ஸ்கொட் தம்பதிகள் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டனர். இவ்வருடமும் தொடர்ந்து நான்காவது வருடமாக கனகரத்தினம் இல்லம் முதலிடத்தைக் கைப்பற்றியது. இரண்டாம் இடத்தைப் பெரேரா இல்லம் கைப்பற்றியது.

ஹொக்கி 17 வயதிற்குட்பட்ட பிரிவினரும் 19 வயதிற்குட்பட்ட பிரிவினரும் பாடசாலைகளுக்கிடையிலான சுற்றுப்போட்டியில் பங்கு கொண்டனர் எங்கள் குழுக்களில் அங்கம் வகிக்கும் வல்லுனர் சிலர் தேசிய பாடசாலைகள் சாம்பியன் போட்டியிற் பங்கு கொள்ள தெரிவு செய்யப்பட்டனர்.

**உதைபந்தாட்டம்:-** பாடசாலைகளின் சுற்றுப்போட்டியில் பங்கு கொண்டு அரையிறுதியாட்டம் வரை 2-ம் கோஷ்யினர் தெரிவாகினர் வலைப்பந்தாட்டம் பாடசாலைகளுக்கிடையிலான சுற்று ஆட்டங்களில் பங்கு கொண்டனர். சில ஆட்டங்களில் வெற்றியீட்டினர்,

**சாரணர் சங்கம்:-** எங்கள் ஆண், பெண் சாரணர்கள் இவ்வருடத்தில் ஊக்கமுடையவர்களாகக் காணப்பட்டதோடு பழைய பூங்காவில் நிகழ்ந்த பாசறை வைபவத்தில் பங்குபற்றிப் பரிசில்கள் பெற்றனர். பிரதமரின் வருகைக்கு 25 க்கு அதிகமான சாரணர் விமான நிலையத்துக்குச் சென்று சேவையில் ஈடுபட்டனர்.

**படைபயில் குழு:-** படைபயில் குழுவின் சிரேஷ்ட கனிஷ்ட பிரிவினர் தியத்தலாவையில் நடைபெற்ற பயிற்சிப் பாசறை வாசத்திற் கலந்து கொண்டனர். பிரதமரின் வருகைக்கு அணிநடைப் பயிற்சியிற் கலந்து சிறப்பித்தனர்.

## சமய இலக்கியப் பணிகள்

க. பொ. த. உயர்தர மாணவர் ஒன்றியம். வர்த்தக மாணவர் ஒன்றியம் ஒழுங்காகக் கூட்டங்களை இவ்வாண்டு நடத்தின. அவை தமது பத்திரிகைகளான மாணவர் குரல், வணிகசோதியை வெற்றிகரமாக வெளியிட்டன. கிறிஸ்தவ மாணவர் மன்றம் தமது

தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாகச் செயலாற்றியது: இந்து மாமன்றம் வழமைபோல் சமய நிகழ்ச்சிகளைத் தவறாது செய்து வந்துள்ளது அன்றியும் சமயக் கூட்டங்கள் ஒவ்வொரு நாளும் அவ்வக் குழுக்களுக்குப் பிரத்தியேகமாக நடாத்தப்படுகின்றன. வாரந்தோறும் நடைபெறும் காலைப் பொதுக்கூட்டங்களில் பல பெரியோர்கள் வந்து சிறப்புரையாற்றிக் கலந்து கொண்டமைக்கு எமது மனமார்ந்த நன்றி. தங்கள் வழமையான கடமைகளுடன் புறகருமங்களிலும் பங்கு கொண்டுழைத்த எல்லா ஆசிரிய ஆசிரியைகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### பழைய மாணவர் சங்கம்

மேற்படி சங்கம் தனது வருடாந்த தினத்தை 1973-ம் ஆண்டு மே மாதத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடியது. நிர்வாகத்திற்கு அவர்கள் அளித்த ஆக்கபூர்வமான உதவிகட்கு நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காலஞ்சென்ற திரு. பத்மநாதன் அவர்களின் ஞாபகார்த்தமாக எழுப்ப முயன்ற திறந்தவெளி அரங்கைப் பூர்த்தியாக்கும் பணியில் ஈடுபடும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

### பெற்றார் ஆசிரியர் சங்கம்

நிர்வாக சபைக் கூட்டங்கள் வருடம் முழுவதும் ஒழுங்காக நடைபெற்றுள்ளன. அயராமுயற்சியும் ஊக்கமும் உள்ள செயலாளர். திரு வி கதிரவேலு அவர்கட்கும் உபதலைவர் திரு கே எஸ் நடராசா அவர்கட்கும் ஏனைய நிர்வாக சபை உறுப்பினர்க்கும் எனது நன்றி உரித்தாகுக. கட்ட நிர்மாண வேலைகள் பூர்த்தியாகும் பட்சத்தில் ஆறு மேலதிக வகுப்பறைகள் பாடசாலைக்குக் கிட்டும். விளையாட்டு மைதானத்தை நோக்கிய வண்ணமாகத் திறந்தவெளி அரங்கும் இக் கட்டடத்துடன் பூர்த்தியாகவேண்டியுள்ளது: இவ் வேலையில் பொருள் உதவிய ஒவ்வொரு பெற்றோருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்; இன்னும் அனேக பெற்றோர் தாமாகவே முன்வந்து உதவத் தலைப்படவேண்டும். மாணவர்களுக்கு அளிக்கப்படும் தளபாடங்களும் வசதிகளும் சில பொறுப்பற்ற மாணவர்களாலும் சில அயலவர்களாலும் நாசமாக்கப்படுகின்றன. இக் கல்லூரி இச் சூழலில் உள்ளவர்களதும் அவர்களது வருங்காலச் சந்ததியினரதுமே யாகும். ஆகவே ஒவ்வொரு அயலவர்களதும் தலையாய கடமை பாடசாலைப் பொருட்களைப் பாதுகாப்பதேயாகும். சுய நலங் கருதி விஷமத்தனங்களில் ஈடுபடுவதனால் தமது வருங் காலச் சந்ததியினர்க்கே நாசம்செய்தவர்களாவார் எனவே பெற்றார்களாகிய நீங்கள் இவற்றை மனதில் இருத்தி பிள்ளை

களையும் நண்பர்களையும் மற்றோரையும் இந் நல்ல பணியில் ஈடுபடத் தூண்டவேண்டும் இது உங்கள் கல்லூரி என்பதை மனதில் இருத்தி வாழும் சமுதாயத்தினர்க்கு வழி வகுக்க வேண்டும்:

**நிறைவுரை**

சுற்றிலே ஆசிரியர் குழாத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் அவர்களது ஒத்துழைப்புக்கும், உதவிக்கும் நன்றியறிதலைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். எக்கல்லூரியும் ஆசிரியர்களது ஊக்கமும், உற்சாகமும் ஒத்துழைப்புமின்றி வளர்ந்தது சரித்திரத்தில் இல்லை. கல்லூரி கடந்த காலங்களில் பெரும் வளர்ச்சி அடைந்துள்ளது என்றால் ஆசிரியர்களது நன்னோக்கும் ஒத்துழைப்புமே அதற்குக் காரணங்களாகும். விசேடமாக உப அதிபர் திரு. த செல்லப்பா அவர்களுக்கும், தலைமையாசிரியர் திரு எஸ். குலோத்துங்கம் அவர்களுக்கும் தேவை நோக்கி எனக்களித்த அறிவுரைகளுக்கும், ஒத்துழைப்பிற்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அலுவலக உத்தியோகத்தர் திரு பழனிச்சாமி அவர்கள் மேலதிகமாக பாடசாலைக்காற்றிய பணிகட்கும் எனது நன்றியுரித்தாகுக. பணியாளர் அனைவர்க்கும். அவர்களது ஒத்துழைப்பிற்கும் உதவிகட்கும் நன்றி கூறுகின்றேன்:

பரிசில்களை மனப்பூர்வமாக வழங்கிய பெரியோர்க்கும், எமது அழைப்பினை ஏற்று அன்புடன் வருகை புரிந்த யாவர்க்கும் நன்றி உரித்தாகுக:

மீண்டும் ஒருமுறை பிரதம விருந்தினர்க்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்:

மலர் சிறப்புற எமது வாழ்த்துக்கள்


**மகேந்திரா ஸ்டோர்ஸ்**

பலசரக்கு வியாபாரிகள்

துறைமுகம் வேலணை

# கல்வி பற்றிய சில எண்ணங்கள்

சித்தாந்தப் புலவன் வித்துவான் க.ந. வேலன் BOL



அறிவுத் தாகம், அறிந்து கொள்ளவேண்டும்என்னும் இயல்பு உயிர் இயல்பு. இத்தாகம்மக்களிடம் ஏனைய உயிர்களைவிட மேலோங்கி யிருக்கும். மக்களுள்ளும் ஒருசிலரிடம் இவ்வுந்தல் மிகுந்து காணப்படும்

இவ்விதம் உயிரினங்களிடையேஅறிவுநிலை வேறுபட்டிருப்பதற்குத் தமிழரிடையே வாழ்ந்த கல்வியாளர்கள் ஒரு தக்க காரணம் கூறியுள்ளனர்.

இயல்பாயமைந்த இவ்வறிவுத்திறனை உண்மையறிவு எனக்கல்வியாளர் வள்ளுவர் கூறியுள்ளார். இதனை இயற்கைஅறிவு என இக்காலக் கல்வியாளர் பெயரிட்டழைப்பர்.

உண்மையறிவு அதாவது இயற்கை அறிவு, சூழலால் பெறும் அறிவு, நூல் அறிவு என ஒருவன் அறிவுபெறும் வாயில்கள் மூன்று எனஇக்காலக் கல்வியாளர் வகுத்துள்ளனர். இம்மூன்றையும் இரண்டாயிரம். ஆண்டுகளுக்கு முன்வாழ்ந்த வள்ளுவர், தம் கல்விச்சிந்தனைகளில் கூறியுள்ளார்.

உண்மையறிவு என்பது ஆன்மாவோடு இவைந்து பிறக்கும் போது உடன்வருவதாகும். இவ்வறிவு உயிர் தோறும் வேறுபட்டிருப்பதற்குக் காரணம் அந்தக் கரண வேறுபாடாகும். அந்தக்கரண வேறுபாட்டுக்கு காரணம் கன்மமாகும். சூழலாற் பெற்ற அறிவும் நூலறிவும் உண்மையறிவுக்குத் துணை செய்ய வல்லனவேயன்றி உண்மையறிவைத் திசைதிருப்பும் வன்மையற்றன வென்பதும் திசைதிருப்ப முயலினும் அவை தோல்வியுற்று உண்மையறிவே மிகும் என்பதும் சான்றோர் கண்ட முடிபாகும்.

இம்முடிபு சூழலும் நூலும் பயனற்றன என்னும் தவறான முடிவுக்கு ஒருசிலரைத் தள்ளக்கூடும் அறிவுவளர்ச்சியில் சூழலும், நூலும் பெருந்துணை செய்வன என்பதும் என்றும் ஒப்புக் கொள்ளப்

பட்ட பேருண்மையாகும். ஊழ்மாறுபட்ட வழி, சூழலும் நூலும்
ஒருவற்குப் பேருதவிபுரியாவிட்டாலும் அவை பதித்த அறிவுத்தடங்
கள் ஒருவற்கு உண்மையான அணிகலன்களாகவே விளங்கும்.
படிப்புக் கேற்ற பண்பில்லாவிட்டாலும் பட்டம் பகட்டுத்தருகிற
தல்லவா? அந்தப்பகட்டு, பண்பை விடவும் விலைபோகிறதல்லவா
அதுபதவியும் பணமும் தருகிறதல்லவா?

உலகில் பிறந்துவிட்ட நம்கையில் உண்மையறிவின் தரம்இல்லை.
அதுமுன்பே அமைந்து விட்டது. அதனைமாற்றும் ஆற்றல் நம்மில்
பலருக்கும் இல்லை. ஆனால் சூழல் அறிவையும் நூல் அறிவையும்
அமைத்துக் கொள்ள நம்மால் முடியும், இவையே இன்றைய கல்விப்
பணி. இவையே கல்வித்திணைக்களத்தின் பணி. இவையே அதிபர்,
ஆசிரியர் பணி; ஓங்கிவளர்ந்து நிற்கும் கல்விக்கூடங்கள் மாணவர்க்
கேற்ற சூழல் அறிவையும் நூல் அறிவையும் வழங்க வேண்டும்.

இவற்றை வழங்குவதில் இன்றைய கல்விக் கூடங்கள் எவ்விதம்
பணியாற்றுகின்றன என்பதை நான் கூறவேண்டியதில்லை.

விளங்காத விஷயங்களை விளங்காத மாணவர்க்கு விளங்கப்படுத்
துகின்ற தொழில் நடக்கும் கூடங்கள் பல. அச்சுப்போலவே பணி
யாரம் உருவாகிறது மண்ணாங்கட்டிகளையும் மாணிக்கங்களாக உரு
வாக்கும் செயலும் நடைபெறுமலில்லை.

ஆன்மவிடுதலையே கல்வியின் நோக்கம் என்று கருதினார்கள் நம்
சான்றோர். படித்தேன் பட்டினிகிடக்கிறேன் என்கிறான் என்மாணவன்.
படித்தேன் வேலை இல்லை, பொலிடோல் குடிக்கப் போகிறேன் என்
கிறான் என் மாணவன். சச்சிதானந்தத்தைத் தரவேண்டிய கல்வி ஒரு
வேலைகஞ்சியாவது தரக்கூடாதா? கீழைத் தேசங்களில் கல்வியில்
முன்னணி வகிக்கும் ஜப்பானுக்கு அடுத்தஇடம் வகிக்கும் ஈழத்தில்
ஏன் இந்நிலை? கற்றவன் வாழவழியில்லையானால் அவன் என்ன கற்றான்?
ஏன் கற்றான்? அக்கல்வி கொளுத்தியோன் யாவன்? கற்பித்த கூடங்
கள் எவை? இந்தத் தேசத்துரோகத்துக்கு விசாரணை வேண்டாமா?
நாம்விசாரிக்கமாட்டோம்! ஏன் அந்தத் துரோகிகள் வரிசையில்
நாமும் நிற்கிறோம்.

பிறருக்கு நன்மை செய்யப் பிறந்த நீ நன்மைசெய்யா
விட்டாலும் தீமையாவது செய்யாதிரு. அதுவே நீசெய்
யும் அரும்பெரும் நன்மையாகும்.

விவேகானந்தர்

# கிறிஸ்தவமும் தமிழும்

**வை: இராஜேஸ்வரன் 12- கலைப்பிரிவு**

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு ஒவ்வொரு மதமும் அதாவது இந்து மதம், பௌத்தமதம், இஸ்லாமியமதம் போன்ற மதங்கள் ஆங்காங்கே காலத்திற்குக் காலம் உறுதுணைபுரிந்துள்ளன. மேலைத் தேயத்திலிருந்து கீழைத்தேயத்திற்குக் கொண்டுவரப்பட்ட கிறித்தவ மதமும் ஆங்காங்கே தமிழ் மொழிவளர்ச்சிக்கு உறுதுணை புரிந்துள்ளது

கிறிஸ்தவர்கள் தமிழ் மொழியை வளர்க்கவேண்டும் என்ற கருத்தோடு தமிழ்நாட்டிற்கு வராவிட்டாலும் தமது மதத்தைப் பரப்ப வேண்டும் என்பதற்காகத் தமிழில் பல இலக்கிய இலக்கண நூல்களையும் நவீனங்களையும் எழுதினர். கிறித்தவமதத்தை இங்கு தத்துவ போதகசுவாமிகள், வீரமாமுனிவர், கால்டுவேல், ஜி. யூ. போப் முதலியோர் பரப்புவதற்காக இங்குவந்தார்கள். இவர்கள் போதனைத்திறனும், மக்களுக்கு நன்மையும் செய்யும் ஆற்றலுமுடையவர்களாக இருந்தமையினால் இவர்கள் மக்களைக் கவரக்கூடியதாக இருந்தது. இவர்களால் கவரப்பட்டமக்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறினார்கள் கிறிஸ்தவமதத்திற்கு மாறியமக்களும் பாதிரிமாருடன் சேர்ந்து கிறிஸ்தவ மதத்தைப் பரப்பத் தொடங்கினார்கள். இவர்கள்தமது மதப்பிசாரத்திற்காக கையாண்ட முறைகள் தமிழ் மொழியின் ஆக்கத்திற்கு உதவின.

15 ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் நாட்டிலே கிறிஸ்தவத் தொடர்பு ஏற்பட்டது. தமிழ் நாட்டில் முன்பிருந்த சிறந்த நூல்கள் எல்லாம் ஓலைச்சுவடியிலேயே எழுதப்பட்டிருந்தன. இதனால் ஓலைச்சுவடியில் இருந்த பலஅரிய நூல்களை யாவரும் படித்து இன்புற அவர்களுக்கு வாய்ப்பு கிட்டவில்லை ஆனால் கிறிஸ்தவர்கள் வரும்போது அச்சுயந்திரத்தையும் கொண்டுவந்து தமது மதப்பிரசாரத்திற்காக அரிய தமிழ் நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டனர் இதனால் பல்லாயிரக்கணக்கானோர் சிறந்தநூல்களையும் படித்துப் பயன் பெறலாயினர்

முதன் முதலில் தமிழ் மொழியில் அச்சிடப்பட்டு வெளிவந்த தமிழ் புத்தகம் கிறிஸ்தவவேதோபதேசம்ஆகும் இந்தக் கத்தோலிக்க மதப்புத்தகத்தை 1578ம் ஆண்டில் வண. ஹென்றிகுவிள் என்ற பாதிரியார் வெளியிட்டார். இப்புத்தகத்தின் பிரதி ஒன்று ஹவார்ட் காலெஜ் நூல்நிலையத்தில் மாத்திரமே இப்போது இருக்கின்றதென்றும் இந்நூலகத்து ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி வேறு எந்த மொழிகளிலும் இதுபோன்ற பழமையானபுத்தகம் கிடையாதென்றும் அறியக்கிடக்கின்றது இதிலிருந்து இந்நூல் தமிழ்மொழிக்கு ஏற்படுத்திக் கொடுத்த சிறப்பினை நாம் விளங்கிக் கொள்ளலாம்.

முதன் முதலில் தமிழில் உரை நடை நூல்களைக் கொண்டு வந்தவர்கள் ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் ஆவர். "கிறிஸ்தவவேதோபதேசம்" வெளிவந்த அதே நூற்றுண்டிலேயே "கிறிஸ்தவவணக்கம்" என்ற நூல் "ஆன்றிக்" என்ற ஐரோப்பிய பாதிரியாரால் எழுதப்பட்டது இதன் பின்பு பல பாதிரிமார்கள் தமிழில் சில உரைநடை நூல்களை எழுதியிருப்பினும், பதினெட்டாம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்த இத்தாலிய தேசத்தவரான பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் எழுதிய "தேம் பாவணி" என்னும் நூல் இன்றும் எம்மவர்களிடையே பிரசித்திபெற்றுள்ளது.

தமிழ்ப் புத்தகங்களைக் கிறிஸ்தவர்களே முதன் முதலில் வெளி நாடுகளில் அச்சிட்டனர். ஒல்லாந்து தேசத்தின் தலை நகரான ஆம்ஸ்ரடாமிலே மலையாள தேசத்தில் உள்ள செடி கொடிகளைப் பற்றிய நூல் ஒன்று 16 ம் நூற்றுண்டில் வெளியிடப் பட்டதாகவும் இதில் தாவரங்களின் பெயர்கள் தமிழில இருப்பதாகவும் அறியக் கிடக்கின்றது. இதைவிட 17 ம் நூற்றுண்டில் "ஷிவல்ற் ஐயர்" என்ற ஜேர்மனியர் ஜேர்மனியில் தமிழ் அச்சு எழுத்துக்களை உருவாக்கி "உண்மைக்கிறிஸ்தவம்" என்னும்நூலை தமிழில் "ஞானக்கண்ணுடி" என்னும் பெயரில் வெளியிட்டார் என்றும் அறியக்கிடக்கின்றது.

இந்தியமக்களுக்கு கிறிஸ்தவமதத்தைப் பிரசாரம் செய்வதற்காகவும் தமிழ்மொழியை வளர்ப்பதற்காகவும் 15 ம் நூற்றுண்டில் இந்தியாவில் திருநெல்வேலிமாவட்டத்தில் உள்ள புன்னைக்காயல் என்னும் இடத்தில் ஒரு கல்லூரி நிறுவப்பட்டதாகவும் இக்கல்லூரிக்கு என்ரிகள் எனும் பாதிரியார் தலைமைஆசிரியராக இருந்தார் என்றும் வரலாறு கூறுகின்றது.

சங்ககாலத்திலோ சங்கம்மருவிய காலத்திலோ பல்லவர் காலத்திலோ எழுந்த நூல்கள் இலக்கியம் கற்ற புலவர்களுக்கு மட்டுமே இலகுவில் விளங்கக் கூடியன. மற்றையோர் அந் நூல்களை விளங்கிக் கொள்வது கடினமாக இருந்தது' ஆனல் ஐரோப்பியர் காலத்தில் அதாவது கிறிஸ்தவமதததைப் பரப்பப் பாதிரிமார்கள் விழைந்து பாமரமக்களும் எளிதில் படித்து தம்மதக் கருத்துக்களை உணர்ந்து பயனடையுமாறு எளிய உரை நடைநூல்கள் பலவற்றை வெளியிட்டனர். இதைக்கண்ட இலக்கிய கர்த்தாக்களும் எளியநடையை விரும்பித் தமது இலக்கியங்களில் கையாளத் தொடங்கினர்.

கிறிஸ்தவப் பெரியார்களே முதன் முதலில் அகராதியைத் தமிழுலகிற்கு அறிமுகப் படுத்தினுர்கள். இவர்கள் "சதுர்அகராதி" என்னும் பெயருடைய அகராதியினையே முதன் முதல் வெளியிட்டனர். இவ்வகராதி எம்மவர்களுக்குச் சிறந்த பயனை விளைவித்தது. இதைவிட இவர்களே முதன் முதல் விஞ்ஞானக் கல்வியையும் தமிழுலகிற்கு அளித்தனர். இவர்கள் இந்தியாவில் தங்கள் மதத்தைப் போதிக்க முற்பட்டபோது, தங்களின் ஆதிக்கத்தை ஸ்திரப் படுத்திக் கொள்வதற்காக மற்றக் கல்விகளையும் போதிப்பதற்காக விஞ்ஞான, பூமிசாஸ்திரப் புத்தகங்களையும் தமிழில் கொண்டுவந்தார்கள்.

தமிழுலகிலே முதன் முதல் வெளிவந்த பத்திரிகைகள் கிறிஸ்த வர்களாலேயே வெளியிடப்பட்டன. சென்னையில் முதன் முதல் 'தமிழ்தாழ்" என்னும் ஒருமாத வெளியீட்டினை சென்னை மதத்துண்டுப் பிரசுரக்கழகத்தினர் வெளியிட்டனர். ஆகவே முதல் தமிழ் மாத வெளியீடு ஆகும். 1810 ம் ஆண்டிலே நாகர்கோவில் கத்தோலிக்க சபையினர் "சுவிசேட பிரபலவிளக்கம்" என்ற மாத வெளியீட்டை வெளியிட்டனர், இத்துடன் இவர்கள் "பாலதீபகை" என்னும் பத்திரிகையும் வெளியிட்டனர். இவ்வேளையிலேயே பாளையங்கோட்டை கத்தோலிக்க பிரசார சபையினரால் "நற்போதகம்" என்னும் மாத வெளியீடொன்றும் வெளிவந்தது.

1814 ம் ஆண்டிலே "உதயதாரகை" என்னும் பெயருடன் ஒரு மாதப்பத்திரிகை முதன் முதல் இலங்கையில் வெளிவந்தது. இதைவிட கத்தோலிக்க சபையினரால் "சிறுபிள்ளைகளின் நேசத்தோழன்" தேசோபகாரி, சுவிசேச தாதிகை, மிசன்பாடசாலைத்தூதன் என்னும் பத்திரிகைகள் வெளியிடப்பட்டன.

மொழி, இலக்கியம் பற்றிய ஆராய்ச்சிகளை ஆங்கிலத்திலும் தமிழிலும் கிறிஸ்தவத் தமிழ் தொண்டர்கள் செய்துள்ளனர். கால்டுவேல் என்ற பெரியார் தென்னிந்திய மொழிகள் எல்லாவற்றையும் கற்று அவற்றிற்கும் தமிழுக்கும் உள்ள ஒப்புமைகளை நுனுகி ஆராய்ந்து திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் பெயரில் ஆங்கிலத்தில் ஓர் அரியநூல் எழுதியுள்ளார். சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் தமிழ்ச் சொற்களையும் தமிழ்மரபினையும் பற்றி சிறந்த ஆராய்ச்சிகளை நடாத்தி தமிழிலும் ஆங்கிலத்திலும் பலகட்டுரைகளை வரைந்துள்ளார் ஜீ. யூ. போப் அவர்கள் தமிழ் மொழியையும் பிழையறக்கற்று அம் மொழியில் தாம் பெற்ற அரியகருத்துக்களையும், இன்பத்தையும் பிறரும் பெறத்தக்கவாறு நாலடியார் திருவாசகம், ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார் இவர் ஆற்றிய இத்தலைசிறந்த பணியினுல் பிறநாட்டவர் தமிழின் பெருமையையும் சிறப்பையும் அறிய வாய்ப்பளிக்கின்றது.

இவர்களை விட ஈழத்தில் 1891 ல் வெளிவந்த "ஊசோன் பாலந்தைகதை' என்னும் நாவலை எழுதியவர் திருகோணமலையைச் சேர்ந்த திரு எஸ். இன்னுசித்தம்பி என்ற கிறிஸ்தவராவர். தமிழகத்திலும் முதன் முதல் தமிழ் நாவலான பிரதாபமுதலியார் சரித்திரத்தை எழுதியவர் திரு வேதநாயகம்பிள்ளை என்ற கிறிஸ்தவர் என்பதையும் நாம் இங்கு நோக்கற்பாலதாகும்.

இன்று எம்மத்தியில் இருந்து தமிழ் தொண்டாற்றும் கிறிஸ்தவர்களில் திரு.சில்லையூர் செல்வராஜன் என்பவர் குறிப்பிடத்தக்கவராவர் இவர் தமிழ் எழுத்து, கவிதை, நாடகத்துறையில் இன்று ஈழத்தில் முன்னணியில் நிற்கின்றார். இவரைவிட நாவல், சிறுகதைத்துறைகளில் தெளிவத்தை ஜோசப், ஏ.வி.பி. கமலன் ஆகிய கிறிஸ்தவ எழுத்தாளர்களும் யதார்த்த இலக்கியம் படைக்கும் எஸ். அகத்திய

ரையும் நாம் இங்கு குறிப்பிடத்தக்க தாகும். இவர்களைவிட திரு எப்
எக்ஸ். இ. நடராசா அவர்களும் கிறிஸ்தவ எழுத்தாளர்களில்
ஒருவராவர்.

தமிழ் ஆராய்ச்சித் துறையில் இன்று முன்னணியில் நிற்பவரும்
அனைத்துலகத் தமிழாராட்சி மன்ற இயக்குனருமான வண. பிதா
தனிநாயக அடிகளார் அவர்கள் கிறிஸ்தவ உலகம் தமிழுக்கு செய்
திருக்கும் தொண்டை உலகெலாம் எடுத்தியம்பி வருகின்றார் இப்ப
டியே 15 ம்நூற்றாண்டு முதல் இன்றுவரை கிறிஸ்தவ மதம் தமிழ்
மொழிக்கு அரியபணிகளைச் செய்து தமிழின் சிறப்பை உலகெலாம்
எடுத்தியம்பிவருகின்றது.


மாணவர்குரல் ஐந்தாவது ஆண்டு மலருக்கு
எமது வாழ்த்துக்கள்

சிறந்த புகைப்படங்களுக்கு
முதன்மை யானதாபனம்

★

பேரம்ஸ் ஸ்ரூடியோ

கண்டிரோட் கிளிநொச்சி

# நடுக்காட்டில் விடப்பட்டால்....

**-விசுவலிங்கம் சுசீலா 11ம் தரம் –**

அன்றொரு நாள் சிவராத்திரி தினம் எங்கள் கல்லூரியின் மூலம் கதிர்காமம் போவதற்கு முடிவு செய்தோம். கல்லூரியின் சார்பாக இரு ஆசிரியைகளும் ஒரு ஆசிரியரும் வருகை தந்தார்கள். இதற்கான பணங்களைச் சேகரிப்பதற்கு முன் உதவி புரிந்து ஒருவாகனத்தையும் ஒழுங்கு செய்தார்கள்.

எங்கள் கல்லூரியின் மாணவிகளுக்கோ கதிர்காமம் போவது என்றவுடன் மிக்கமகிழ்ச்சி. அன்று செவ்வாய்கிழமை பகல் ஒன்பது மணியளவில் செல்வதாக சகலர்க்கும் கூறப்பட்டது. இதனால் அவ்வாண்டு சிவராத்திரி தினத்தை மிக்கமகிழ்ச்சியுடன் கழிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்வதில் சகல மாணவிகளும் ஆர்வம் காட்டினார்கள் சகல மாணவிகளும் எப்பொழுது செவ்வாய்கிழமை வரும் என்று எதிர் பார்த்துக் கொண்டு அன்று திங்கள் இரவை பல ஊழிக்கால இரவு நீண்டு வளர்ந்து நிற்பது பேல நினைத்துக் கழித்தார்கள்.

தங்களுக்கான சகல உடைமைகளையும் ஆயத்தம் செய்தார்கள் ஆசிரியர்களும் வந்தார்கள். செவ்வாய்கிழமை பகல் பத்துமணியளவில் எல்லோரும் தங்களுக்கென ஒழுங்கு செய்யப்பட்ட வாகனத்தில் ஏறிக்கொண்டார்கள். அந்தநேரத்தின் ஆரவாரமே, விண்ணையும் பிளந்தது என்று கூறுவதில் எவ்வித ஐயமுமில்லை. வாகனமும் வெளிக்கிழம்ப ஆரம்பித்தது. ஆரவாரமும் மழைபெய்து ஓய்ந்தது போல் தென்பட்டது.

வாகனம் பல இடங்களையும் தாண்டிச் சென்று கொண்டிருக்கையில் மாணவிகளின் தேவாரப் பாடல்களோ வானையே பிளந்தது சகலரும் பக்தி வெள்ளத்தில் மெய் மறந்து இருந்தார்கள். முருகண்டி சாலி மாத்தறை போன்ற பல இடங்களில் ஆங்காங்கே தங்கி களைப்பாறினோம். ஆகா! எத்தனை இன்பம் எத்தனை மகிழ்வு, இத்தனைக்கும் இடையே நெருங்கிக் கொண்டிருந்தது கதிர்காமம் கதிர்காமத்தை இரவு 12 மணியளவில் சென்று அடைந்தோம். வாகனம் நின்றதும் "அரோகரா, முருகனுக்கு அரோகரா" என்ற கோஷமும் நின்றது வாகனத்தை விட்டு இறங்கினோம் எங்கும் ஒரே இருள்மயம் நாங்கள் எங்கு நிற்கிறோம் என்பது மட்டும் அறிந்து கொண்டோமே தவிர எங்கு செல்வதென்றே ஒருவருக்கும் தெரியவில்லை.

ஆசிரியர்கள் எங்களுக்கான மடத்தை ஒழுங்கு செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டார்கள். மக்களின் கூட்டமோ சொல்ல முடியாத அளவில் இருந்தது. அந்நிலையில் எங்களையும் அவர்களின் கூட்டத்தில் ஒன்றாக விட்டு விட்டு இரு ஆசிரியர்களும் இருப்பிடம் பார்க்க சென்றார்கள். ஆசிரியை ஒருவரின் உதவியுடன் நின்ற எங்களை இரு ஆசிரியர்களும் ஏற்பாடு செய்யப்பட்ட மடத்திற்கு அழைத்துச் சென்றார்

கள். அங்கு நாங்கள் எமது பாசல்களை வைத்துவிட்டுக் குளிக்கச் சென்றோம். குளிக்க செல்வதற்கு இருவர், மூவராக ஒருவர் பின் ஒருவராக மாணிக்க கங்கையை நோக்கிநடந்தோம், நானும் எனது நண்பி வசந்தமாலாவும் கடைசியாக சென்று கொண்டிருந்தோம். திடீரென சோ என்ற இரைச்சலுடன மழைபெய்ய ஆரம்பித்தது. மக்களோ அங்கும் இங்குமாக ஒதுங்கினார்கள். எங்களுடன் வந்தவர்களும் எங்களை எங்கயோ மாயமாய் மறைந்து விட்டார்கள் மழையும் ஒரு வாறுதன் பலத்தைக் குறைத்தது. நாங்கள் யாரும் அற்ற அனாதையாக, எங்களுடன் வந்தவர்களை தேடித்தேடி. அலைந்தோம் இறுதியில் சிறு பாதையாகத் தெரிந்த ஓர் வழியே தொடர்ந்து நடந்தோம். ஆனால் இருவருக்கும் பாதை தெரியவில்லை அப்பாதைக்கு நாங்கள் சென்றதாலோ என்னமோ தெரியாது அதற்கு முடிவே கிடையாது நாங்களும் நடந்து கொண்டேயிருந்தோம்.

இறுதியில் காடுகளும் புதர்களும் நிறைந்த பாதையும் அதன் அருகே ஆறுகளின் பேரிரைச்சலுமே எங்கள் காதில் கேட்டது. எங்கள் மனதில் ஒரே பீதியேற்பட்டது. யாது செய்வதென்றே தெரியவில்லை மிருகங்களின் பயங்கர சத்தம், காட்டுப்பறவைகளின் ஓசை இவை அத்தனைக்கும் இடையிலுள்ள மனப்பயம் எங்களை அடியோடு வாட்டியது நடுக்காட்டில் தத்தளிக்கும் எங்களுக்கு யார்தான் துணை வருவார்களோ என்று நினைத்தபடியே இருவரும் கதிர்காமகந்தனை நினைந்து மன்றாடினோம் சூரியனும் எங்களின் தத்தளிப்பை சகியாதவன் போன்று தனது கதிர்கற்றைகளைப் பரப்பினான். பொழுதும் புலர்ந்து கொண்டுவந்தது கும்பிட்டதெய்வம் குறுக்கே வந்தது போல் அவ்விடத்திற்கு சிறிது தூரத்தில் ஒரு மனிதவுருவம் தென்பட்டது. இருவரும் ஒருவாறு மனதைத் தேற்றிக் கொண்டோம். ஆனால் மனிதனாக இருப்பினும் அவன் மனிதத்தன்மை வாய்ந்தவனோ என்ற சந்தேகம் மனதில் உதயமாயிற்று. என்றாலும் கிட்ட நெருங்கி அவ்வுருவம் வந்ததும் மனதிற்கு ஓரளவு மகிழ்வு தென்பட்டது; ஏனெனில் அவருடைய தோற்றம்சாந்தமாயிருந்தது

அக்கிழவனும் எங்களைக் கண்டதும் குழந்தைகளே! இங்குஏன் வந்தீர்கள் நீங்கள் நீண்ட தூரம் வந்து விட்டீர்கள் திரும்பிச் சென்று உங்கள் இருப்பிடத்திற் போங்கள் என்று கூறினார். இவருடைய சாந்தமான தொற்றத்தையும் குரலையும் கேட்டபொழுது நாங்கள் மனதைத் தேற்றியவாறு நடந்த விபரத்தை கூறினோம். அவரும் எங்களின் நிலையைக்கண்டு கோயிலுக்கு அழைத்துக் கொண்டு செல்வதாசக் கூறினார் மூவரும் கதிர்காமத் தலத்தை நோக்கி நடந்தோம். எங்கள் இருவரின் கண்ணுக்கும் அத்தலம் தென்படும் தொலைவில் சனசஞ்சாரமுள்ள இடத்தில் எங்களை விட்டு விட்டு அக்கிழவன் திடீரென எங்கோ மறைந்துவிட்டார் நாங்கள் இருவரும் வந்தவரைக் காணவில்லையென நினைத்து சற்று முற்றும் பார்த்தோம் தென்படவில்லை. இருவரும் அவருக்கு நன்றி கூறவில்லையே என கவலையுடன் எல்லாவற்றிற்கும் கந்தனிடம் சொல்வோம் எனகோயிலை

அடைந்தோம் அங்கே நாங்கள் எதிர்பாராத விதத்தில் எங்களை விட்டுப் பிரிந்த ஏனைய சகமாணவிகளையும் ஆசிரியர்களையும் கண்டோம். அவர்களும் எங்களைக் காணாத கவலை முகத்துடனே நின்றார்கள். எங்களைக் கண்டதும் அவர்களின் முகம் கதிரவனைக் கண்ட செந்தாமரைபோல மலர்ந்தது. பின்னர் நாங்கள் இருவரும் எங்களுக்கு நடந்தவற்றை கூறினோம். அவர்கள் அதிர்ச்சியடைந்தவர்களாக எல்லோரும் வாயைப் பிளந்தார்கள். ஏனென்றால் நாங்கள் மாறிய இடம் திசமாற என அவர்கள் கூறினார்கள்.

முன்பு நடந்தவற்றை எல்லாம் ஒரு கனவாக நினைத்துவிட்டு நாங்கள் இறைவனை வழிபட்டு விட்டு எங்கள் தங்குமடத்திற்குச் சென்றோம். அன்று பகல் 10 மணியளவில் பிரயாணத்தை ஆரம்பித்தோம். வரும் பொழுது பல இனிமையான சினிமாப் பாடல்களுடனும், பக்திப்பாடல்களுடனும் எங்கள் கல்லூரியை வந்தடைந்தோம். ஆகா! அப்போது தான் என்ன இன்பம்-


அன்பளிப்பு

குமரன் ஸ்ரோர்ஸ்

நெடுந்தீவு

உரிமையாளர்- M. S. குமாரசாமி

# Science and General Ideas

— By S. Varatharajan (12 Science) —

Ignorance is one of the main reasons why wrong ideas and useless Practices develop. Even now there are many people whose outlook on things is not scientific. They believe in magic and spirit influence The most unpardonable example of superstition is the belief in witch - eraft which sent many innocent woman to the stakes. Yet the value of the scientific knowledge is undoubted. Advancement of science naturaly changes our general ideas. The astronomical science has entircly changed our views as to the place of man in nature. We now know that the sun is just one of the millions of stars.

Science not only provides knowledge about nature. The practical applicatien of science has revolutionized our way of living The most obvious example is transport. The discovery of electricity made possible use of the telegraph, Wirless and television which are very useful in human life, The world is abridged by quick means of transport and communication. It is interesting to survey the progress of scientific development.

Science can also be destructive, The invention of nuclear weapons made people sick, poor and homeless The nuclear energy is used for destruction by big countries. In big industrial cities smoke hangs like a pall in the sky. We cant have sun shine and fresh air in these places. So we must turn to science to save us from these evils.

Now the problem that face scientists is the utilisation of science for coping with our social problems. For example here are such problems as slow prodution, Unemployement, wastage etc...... And science must devise some methods by which these can be solved. The people must understand that science also deals with human life and that scientific spirit is as imporant in human affairs as in lab or workshop.

Ten thousand years ago man lived perfectly by hunting. A civilized life began when agriculture was discovered. During the last few years changes have been very rapid. So we must do a good study of economic and social changes in the world in a scientific way. In fact science has already changed the ways of human life. The world is changing day by day. We do realize that the world is not static. With the help of science man can learn now to control his fate. There is no future without Science.

# தரப்படுத்தல்

—வசந்தமாலா குணசிங்கம் 11 கலைப்பிரிவு.

ஈழத் தமிழ் மாணவர்களின் இன்றைய பிரச்சனை தரப்படுத்தலாகும். அப்பிரச்சனை இன்று கல்வியுலகைக் கலக்கியுள்ளதோடு, கல்வித் திணைக்களத்திற்கும் பெரும் தலையிடியாயுள்ளது. ஆயின் தரப்படுத்தல் என்றும் தலையிடியைத் தோற்றுவித்ததும் கல்வித் திணைக்களமே.

பிரச்சனையின் அடிப்படை: தரப்படுத்தும் முறை உருவாகியதற்கு இரண்டு அடிப்படைக் காரணங்கள் உள்ளன. அவை (1) ஈழத்தின் பல்வேறு பகுதிகளிலும் கல்வி வசதிகள் சமனற்றிருக்கிறது. இதனால் வசதி குறைந்த பகுதிகளில் கல்வி கற்கும் மாணவர்கள் திறமையிருந்தும்கூட வசதிகள் குறைவின் காரணமாகப் பொதுத் தேர்வுகளில் தமது திறமையைக் காட்ட முடியாதிருக்கின்றது. அதே சமயம் கல்வி வசதிகள் கூடுதலாயுள்ள பிரதேசங்களில் வாழும் மாணவர்களிலே சராசரியான திறமையானவர்களும், திறமையற்றவர்களும் வசதிகளின் உதவியினால் பொதுத் தேர்வுகளில் அதிக திறமையைக் காட்டக்கூடியதாயிருக்கின்றது. இதனால் பொதுத் தேர்வில் பெறப்படும் புள்ளியடிப்படையில் பல்கலைக்கழகத்துக்கான தெரிவுகளை மேற்கொள்ளும்போது வசதிகூடிய மாவட்டங்களிலுள்ளோரே அதிகமாகத் தெரிவு செய்யப்படுகின்றனர். எனவே வசதி குறைவான பகுதிகளிலுள்ள மாணவர்களின் பெறுபேறுகளை வசதி கூடிய பிரதேசங்களில் வாழ்பவர்களின் பெறுபேறுகளுடன் ஒப்பிடுதல் தவறாகும். (2) தமிழ்ப் பிரதேசங்களில் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான, பொறியியல், மருத்துவ துறைகளுக்கு அதிக மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு வருகின்றனர். தமிழ்மொழி மூலப் பரீட்சார்த்திகளின் விடைத்தாள்களை திருத்தும் பரீட்சகர்கள் புள்ளியிடு முறையின் தரம் வேறுபட்டதாயிருப்பது இதற்கு ஒரு காரணமாயிருக்கலாம்,

பல்கலைக்கழகத் தெரிவில் காணப்படும் மேற்கூறப்பட்ட குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியே மாவட்ட ரீதியான கோட்டா அடிப்படையிலும் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டுமெனக் கல்வித்திணைக்களம் கூறுகின்றது. ஆனால் கல்வித் திணைக்களம் கையாளும் 'தரப்படுத்தல்' என்ற மருந்து தான் தீர்க்கவந்த நோயிலும் மோசமானது என்றே கல்விமான்கள் கருதுகின்றனர்.

முதலில் 'பிரதேசக் கோட்டா' அடிப்படையிலான தெரிவு முறையை நோக்குவோம். இம்முறை வசதிகூடிய பகுதிகளில் வாழும் சிங்கள, தமிழ் மாணவர்களை கடுமையாகப் பாதிப்பதனால் மிகத் திறமையுடையவர்கள் கூடத் தெரிவு செய்யப்படாமற் போகலாம் இதனால் இப்பகுதிகளில் வாழும் மாணவர்கள் தமது திறமை புறக்கணிக்கப்படுவதைக் கண்டு வாழ்க்கையிலேயே விரக்தியடைவதில் வியப்பொன்றுமில்லை மேலும் பல்கலைக்கழகக் கல்வி என்பது திறமைசாலியாகக் காணப்பட்டவர்களுக்கேயன்றி, திறமைசாலிகளாயிருப்பர் எனச் சந்தேகிக்கப்படுபவர்களுக்கன்று அன்றியும் விருத்தியடைந்து வரும் எமது நாட்டின் எதிர்காலம் எமது பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறுபவர்களின் கையில் தங்கியிருப்பதினால் நாம் திறமைசாலிகளையே தேர்ந்தனுப்புதல் அவசியமாகும். இங்கு 'திறமை' என்பது பொதுத் தேர்வில் பெறப்படும் மொத்தப் புள்ளியடிப்படையிலோ அல்லது கல்விமான்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொருத்தமான வேறு முறையின் அடிப்படையிலோ அமைந்ததாயிருக்க வேண்டும். இவ்வாறு திறமையான மாணவர்களைப் பல்கலைக்கழகக் கல்வி பெறுது தடுப்பது நாட்டின் நலனுக்குக் குந்தகம் விளைவிப்பதோடு பெறுமதி வாய்ந்த மனித மூலவளத்தையும் காலத்தையும் கல்விக்கென ஈடுபடுத்தப்படும் முயற்சியையும் விழலுக்கிறைத்த நீராக்கும்.

பிரதேச ரீதியான கல்வி வசதி வேறுபாடுகள் இருக்குமாயின் வசதி குறைவான இடங்களில் அவற்றை அதிகரிப்பதேயன்றி அப்பிரதேசங்களுக்குச் சலுகையளிப்பது சிறந்த வழியன்று அன்றியும் அண்மைக்காலத்தில் பின்தங்கிய பகுதிகளில் வாழும் மாணவர்களிற் பலர் புலமைப் பரிசில்களைப் பெற்று மாகாணத் தலைநகரங்களிலுள்ள சிறந்த கல்லூரிகளில் கல்வி கற்று வருகின்றனர். இதன்

மூலம் பிரதேச ரீதியான கல்விவசதி வேறுபாடுகள் அகன்று வருவது குறிப்பிடத்தக்கது. மேலும் கல்வி வசதிகள், மாவட்டங்களுக்கிடையில் மட்டுமன்றி மாவட்டங்களுக்குள்ளேயும் சமமாக இல்லை; உதாரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் பரந்தன், கிளிநொச்சி, பூநகரிப் பகுதிகள் அம்மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் பார்க்க வசதி குறைந்தவை. எனவே மாவட்டக் கோட்டா முறை மாவட்டத்திலிருக்கும் பிற்போக்கான பகுதிகளுக்குப் பெருந் தீங்கினை விளைவிக்கிறது என்பது தெளிவு.

அடுத்து மொழிவாரியான தரப்படுத்தலை எடுத்துக் கொள்வோம். இலங்கையில் பொதுத் தேர்வுகள் சிங்களம் தமிழ், ஆங்கிலம் எனும் மூன்று மொழிகளிலும் இடம் பெறுகின்றன. தேர்வு வினைக்கள் ஒரு மொழியில் (பெரும்பாலும் ஆங்கிலம்) தயாரிக்கப்பட்டு ஏனைய மொழிகளில் பெயர்க்கப்படுகின்றன. இத்தகைய மொழிபெயர்ப்புகள் சிலபோது பரீட்சார்த்திகளுக்கு சாதகமாயிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. ஆனல் இது ஒரு வேடிக்கையான கூற்றாகும். உண்மையில் மொழிபெயர்ப்பு மாணவர்களுக்குப் பாதகமானதாகவும், தெளிவற்றதாகவுமிருப்பதையே நாம் காண்கின்றோம் எனவே இக்காரணத்தைக்கொண்டு மொழிவாரியான தரப்படுத்தல் செய்வது முறையன்று.

இரண்டாவதாக விடைத்தாள் திருத்தும்போது பரீட்சகர்கள் தமிழ்மொழி மாணவர்களுக்குச் சாதகமாகத் திருத்துவதாகவும் ஒரு தப்பான கருத்து நிலவுகிறது ஆனல் G. C. E. உயர்தரத் தேர்வில் விஞ்ஞான வினைத் தாளில் பெரும் பகுதி பல்தேர்வு (Multiple Choice) வினைக்களாகவும் ஒருபகுதி மட்டும் கட்டுரை வடிவான வினைக்களாகவும் இருக்கின்றன: கட்டுரை ரூபமான வினைக்களின் விடைகள் திருத்தப்படும்போது பிரதம பரீட்சகரின் கண்காணிப்பு உள்ளது அவர் இடைக்கிடை பரீட்சகரின் திருத்து முறையைப் பரிசோதிக்க இடமிருப்பதால் எந்த மொழி மூலம் பரீட்சார்த்தி பரீட்சையை எழுதினும் அவரது பெறுபேறு சாதகமாயமையும் எனக்கூற முடியாது.

இவ்வாறு பிரதம பரீட்சகரினல் விடைத்தாள்கள் இடைக்கிடை பரிசோதனைக்குஞ்படுத்தப்படுவது திருத்தலின் தரம்குறையாமலிருக்க உதவுகிறது. எனவே எவ்வழியில் நோக்கினும், விடைத்தாள் திருத்தலின் மொழிவாரியான தரவேறுபாடு இருக்கின்றது என்ற கூற்று மிகைப்பட்டதாகவேயுள்ளது, மேலும் அத்தகைய தர

வேறுபாடுகள் மொழிபெயர்ப்பினாலோ வேறு வழிகளிலோ ஏற்படுமாயின் அதனைச் சீர்ப்படுத்துதல் கல்வித் திணைக்களத்தின் பொறுப்பேயென்பதை மறுக்க முடியாது.

இந்நிலையில் பல்கலைக்கழகக் கல்விக்கான தெரிவு முறை புனராலோசனை செய்யப்பட வேண்டும். மாவட்டக் கோட்டா முறை மொழிவாரியான தரப்படுத்தல் ஆகியன நாட்டின் எதிர்கால விருத்திக்கும் இன ஒற்றுமைக்கும் பங்கம் விளைவிப்பதனால் அவை நீக்கப்பட வேண்டும். ஆனால் அபிவிருத்தி குறைந்த பகுதிகளுக்காக ஒரு "கோட்டா" முறையைப் பின்பற்றி குறிப்பிட்ட அளவான இடங்களை அப்பிரதேச மாணவர்களுக்கு ஒதுக்கலாம். இப்பிரிவினருக்கு 20 சதவீதமான இடங்களை ஒதுக்கலாம். அதேசமயம் 70 சதவீதமான மாணவர்களை திறமையடிப்படையிலேயே தெரிவு செய்ய வேண்டும். இதற்காக மாணவர்கள் உயர்தரத் தேர்வில் பெற்ற மொத்தப் புள்ளிகளைப் பயன்படுத்துவதே பொருத்தமானது. இத்தெரிவுக்கு எந்தவிதமான தரப்படுத்தலும் தேவையில்லை. அத்துடன் பல்கலைக்கழகத்தில் 20 சதவீதமான இடங்களை, ஏதோ ஒரு துறையில் மிருந்த திறமை காட்டுபவர்களுக்கு ஒதுக்குதல் விரும்பத்தக்கது. உதாரணமாக உயர்தரப் பரீட்சையில் ஏதாயினும் இரண்டு பாடங்களில் 'A' தரத்தையும் வேறு இரண்டில் சாதாரண சித்தியையும் பெறும் மாணவர்களுக்கென 10 சதவீதமான இடங்களை ஒதுக்குவதன் மூலம் அம்மாணவர்களின் விசேட திறமைகளுக்கு மதிப்பளித்து அதன்மூலம் நாட்டின் எதிர்கால விருத்திக்கு அடிகோலமுடியும். இவ்வாறு பரந்த நோக்குடன் பல்கலைக்கழகத் தெரிவு முறையைச் செயல்படுத்துவதன் மூலமும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் கல்வி வசதிகளை ஒரேயளவில் அதிகரிப்பதன் மூலமும் தற்போதைய பிரச்சனைகளுத் தீர்வு காண்பதே சிறந்த வழியாகும்.


Space Donated By

**Thambyappah & Son**

**339. Kasturiar Road** **Jaffna**

அன்பளிப்பு

**மலாயன் கபே**

சுவை இருப்பின் நண்பர்களிடம் கூறுக. குறை இருப்பின் எம்மிடம் கூறுக

பெரியகடை யாழ்ப்பாணம்

அன்பளிப்பு

**லங்கா ரேடிங்**
**அயன் வேக்ஸ்**

21, ஸ்ரான்லிவீதி
**யாழ்ப்பாணம்**

எங்களிடம் வாருங்கள்
எழில் மிகு புகைப்படம் பிடியுங்கள்
அன்புடன் அழைக்கிறோம்

★

**ஸ்ருடியோ சற்குணம்ஸ்**
51, பிரதான வீதி யாழ்ப்பாணம்

'மாணவர் குரல்' 5-ம் ஆண்டு மலர் வெளியீடு

சிறப்புற எமது நல்வாழ்த்துக்கள்!

ஆடவர்க்கும் அரிவையர்க்கும்
ஆடிவரும் சிறுர்களுக்கும்

அழகு வண்ணப் பிடவைகளுக்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்!

# கணேசானந்தாஸ்
# சில்க் பலெஸ்

ஈழத்தின் இணையற்ற பிடவை ஸ்தாபனம்

15, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.


ஈஸ்வரா அச்சகம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்